Not for sale

செப்டம்பர் - அக்டோபர் 2016

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள்

கிறிஸ்துவுக்குள்ளான வளர்ச்சி • இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், நம்பிக்கையை ஒருபோதும் இழக்க வேண்டாம் • சோதனைகளின் வழியாக ஆவிக்குரிய வளர்ச்சி

அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்

கண் கண்டதுமில்லை • வாக்குத்தத்தங்கள் நம்புதல்

## விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள்

# ஆதியிலே



மனுஷன் ஏற்படுத்தின எந்த வாக்குத்தத்தங்களையும்போல, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் இல்லை. இவைகள் அதிக எண்ணிக்கையுள்ளவைகளும், அவைகளின் நோக்கங்கள் மற்றும் அர்த்தங்கள், மனிதன் கொடுப்பதற்கு அப்பாற்பட்டது. தேவனைப் பொறுத்த வரையில் ஒரு வாக்குத்தத்தம் ஒரு கிரியைக்குண்டான உத்திரவாதமாகும். அவர் வாக்களித்த அனைத்தையும், குறித்த காலத்தில் செய்பவர். நாம் விரும்பக்கூடிய பதில்களையும் அல்லது நாம் விரும்பும் காலக்கட்டத்திற்குள் அவருடைய ஞானம் எப்போதும் கொடுப்பதில்லை என்று புரிந்து கொள்வதே தேவனை நம்புவதற்கான ஒரு திறவுகோலாகும். அவருடைய சித்தத்தின் குறித்த காலத்தையும், அதை நிறைவேற்றும் விதத்திலும் அவர் எந்தத் தவறும் செய்வதில்லை. ஆகவே தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நம்முடைய இருதயத்திற்கு ஆறுதலையும், இளைப்பாறுதலையும் கொடுப்பதற்கு, நாம் அவருடைய காலத்தையும், வாக்குத்தத்தங்களை நிறைவேற்றும் விதத்தையும் ஏற்றுக்கொள்ள மனப்பூர்வமாக சம்மதிக்க வேண்டும். தேவனுடைய வார்த்தைகள் எந்தளவுக்கு பலத்தின் ஊற்றாக இருக்கிறது என்ற உண்மையை ஒரு கிறிஸ்தவன் காணும்போது, அவர்மேல் வைத்திருக்கும் நம்பிக்கை வளர்ந்து தேவனுடைய வாக்குத்தத்தங்கள் இன்னும் உண்மையாகிறது. இப்படிப்பட்ட நம்பிக்கையோடு, "விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள்" என்ற இந்தப் பிரதி பகிர்ந்தளிக்கப்படுகிறது, கொடுக்கப்பட்டுள்ள இடப்பரப்பு வரம்புக்கு உட்படுத்தப்பட்டபடியால், நாம் தேவனுடைய விலையேறப்பெற்ற வார்த்தைகளில் சிலவற்றை மட்டுமே ஆராய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

**கிறிஸ்துவுக்குள் வளர்ச்சி** என்ற தலைப்பு, கிறிஸ்துவைப்போன்று கனிதரும் குணங்களை நாம் நம்மிடம் வளர்ப்பதற்கான முக்கியத்துவத்தைப்பற்றி விவரிக்கிறது. இயேசு திராட்சச்செடியாகவும், நாம் அதன் கொடிகளாகவும் இருக்கிறோம். இது தேவனுடைய ஆவியினால் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தச் செடியில் நிலைத்திருக்க ஒழுக்கம், கீழ்ப்படிதல் மற்றும் தேவன் நம்மை நெறுக்கித் திருத்தம் செய்யக்கொடுக்கும் அனுபவங்களை ஏற்றுக்கொள்ளும் விருப்பம் நம்மிடத்தில் காணப்பட வேண்டும்.

**இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், நம்பிக்கையை ஒருபோதும் இழக்க வேண்டாம்** என்ற தலைப்பு, சரியான விண்ணப்பங்களை தேவனிடத்தில் ஏறெடுப்பதற்கு ஆராய்கிறது. தன்னுடைய வாலிபமான கிறிஸ்தவ வாழ்க்கையில் பதிலளிக்கப்பட்ட ஜெபம், தன்னுடைய விசுவாசத்தை எவ்வாறு உறுதிப்படுத்தியது என்று ஒரு தனிப்பட்ட அனுபவத்தை இந்தப் பாடத்தின் ஆசிரியர் நம்மோடு பகிர்ந்துகொள்கிறார். இறுதியாக, "ஆனால்" என்ற சிறிய வார்த்தை, தேவனுடைய சில வாக்குத்தத்தங்கள், நம்முடைய கிரியைகளின்படி நிபந்தனைக்கு உட்பட்டது என்று வெளிப்படுத்துகிறது.

**சோதனைகளின் மூலம் வளர்ச்சி** என்ற தலைப்பு, நாம் பெறும் சோதனைகளின் விளைவுகள் மூலம் நாம் வலுவடைவதையும், சோதனைகளைத் தாங்கிக்கொள்ள மட்டுமல்லாமல் அவற்றில் ஜெயங் கொள்ளவும் தேவன் நமக்கு வாக்களித்திருக்கிற உதவி பற்றியும் விவரிக்கிறது.

**அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்** என்ற தலைப்பு, "பாவம் மற்றும் அபூரணமான அனுபவங்களின் வழியாகவே மனுஷன் பூரணமடைய முடியும்" என்ற தேவனுடைய திட்டத்தை எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும் என்று விவரிக்கிறது. கிறிஸ்துவின் புண்ணியங்களினால் ஆசீர்வதிக்கப்பட்ட புது சிருஷ்டிகளாகிய நாம், இயல்பான நம்முடைய பலவீனங்களை மேற்கொண்டு ... "உதவிகள் தேவைப்படும் நேரத்தில் தைரியமாக, கிருபாசனத்தண்டைக்குப் போகலாம்."

**கண்காணவும் இல்லை** என்ற தலைப்பு, இந்த யுகத்தில் அர்ப்பணிக்கப் பட்டவர்களுக்காகக் காத்திருக்கும் சில வருங்கால வாய்ப்புகளைக் காண்கிறது. தேவன் நம்முடைய ஆண்டவருக்காக ஒரு மணவாட்டியைத் தேர்வு செய்யும்போது, சில குறிப்பான தகுதிகளை விரும்புகிறார். இந்த விலையேறப் பெற்ற ஐக்கியம், ஒரு புதிய நாமம், ஜீவ கிரீடம் மற்றும் தற்காலத்தில் நடைபெற இருக்கும் வெளிப்படுத்தப்படாத தேவனுடைய கிரியைகளில் பங்கேற்கும் நம்பிக்கையை சிறுமந்தை கொண்டிருப்பதால், இதற்கு விலைமதிப்பில்லா உறவு அவர்களுக்கு "நிறைவான மகிழ்ச்சியைக்" கொடுக்கிறது.

இறுதியாக, **வாக்குத்தத்தங்களை நம்புதல்** என்ற தலைப்பு, தேவனுடைய வாக்குத்தத்தங்களைத் தங்களுடைய இருதயத்தில் ஆழமாக நிலைநாட்டி, அவைகளை நம்புவதற்குக் கற்றுக் கொள்ளும்படியாக, ஒவ்வொரு கிறிஸ்தவரையும் ஊக்குவிக்கிறது. விழுந்துபோன மாம்ச கண்களினால் அல்ல, தேவனுடைய கண்களின் வழியாகக் காண்பதற்கு நாம் கற்றுக்கொள்ளும் போது, நம்முடைய பாதையில் இருக்கும், "தடைகற்களை" எளிதாகத் தாண்டி விடலாம். சில குறிப்பான தடைகற்களைப் பற்றி ஆராயப்படுகிறது. மேலும், இவைகளை ஜெயங்கொள்வதற்கு உதவி செய்யும் வாக்குத்தத்தங்கள் இங்குப் பகிர்ந்துகொள்ளப் படுகிறது. "இருதயத்தின் நம்பிக்கை விசுவாசத்தின் செயல்பாடு."

### செப்டம்பர்- அக்டோபர் 2016


**கிறிஸ்துவுக்குள்ளான வளர்ச்சி** 2

நற்குணங்களின் வளர்ச்சிக்குத் தொடர்புடைய வாக்குத்தத்தங்கள்

**இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், நம்பிக்கையை ஒருபோதும் இழக்க வேண்டாம்** 8

ஜெபத்திற்கான பதில்களைப் பற்றிய வாக்குத்தத்தங்கள்

**வேதாகமத்தில் குதிரைகள்** 13

சோதனைகளில் உதவி செய்யும் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள்

**அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்** 18

குறைபாடுகள் மற்றும் பலவீனங்களைப் பற்றிய வாக்குத்தத்தங்கள்

**கண் கண்டதுமில்லை** 23

திரைக்கு அப்பால் உள்ள சந்தோஷத்தைப் பற்றிய வாக்குத்தத்தங்கள்

**வாக்குத்தத்தங்களை நம்புதல்** 27

தொடரும் தேவனுடைய மேற்பார்வை சம்மந்தப்பட்ட வாக்குத்தத்தங்கள

**தீர்க்கதரிசனத்தில் இன்று** 32

பிரிட்டன் வெளியேற்றத்தால் உலகம் அதிர்ச்சி

நற்குணங்களின் வளர்ச்சிக்குத் தொடர்புடைய வாக்குத்தத்தங்கள்

# கிறிஸ்துவுக்குள்ளான வளர்ச்சி



"நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்" (யோவான் 15:8).

அண்டசராசரத்தைச் சிருஷ்டித்தவர், நமக்குள் ஏதோ புதியதை சிருஷ்டிப்பதற்கு நம்மைத் தேர்வு செய்திருக்கிறார். அவர் இந்நாள்வரை உருவாக்கிய எல்லாவற்றைக்காட்டிலும் மகிமையானது - புதுசிருஷ்டி மாறுப்பட்ட ஜீவியத்திற்காகவும், வளர்ச்சிக்காகவும், தேவனுடைய குமாரனின் சாயலாக உருமாறுவதற்காகவும், தேவன் அழைத்திருக்கிறார் (ரோமர் 8:29). தேவனுடைய தாழ்மையான குழந்தைக்கு இதைவிட பெரிதான சிலாக்கியமும் மதிப்பும் வேறில்லை.

நம்முடைய இயல்பான சிந்தைக்கு இது கிட்டாததுபோல தோன்றும். மேலும் நம்முடைய சொந்த அபூரணமான நிலை மற்றும் விழுந்துபோன ஆதாரங்களிடம் விட்டுவிட்டால் இது நிரூபிக்கப்படும். ஆனால் தேவன் நமக்களித்த ஏராளமான வாக்குத்தத்தங்களுக்காக அவருக்கு நாம் நன்றி சொல்லுவோம். நம்முடைய கிறிஸ்தவ வளர்ச்சியின் எல்லா கோணங்களிலும் அவருடைய ஆவியின் கனிகளை பெருமுயற்சியோடு வளரச்செய்வதற்கு உதவியான தேவனுடைய வாக்குத்தத்தங்கள், "இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்" (2 பேதுரு 1:4-7) என்று பேதுரு கூறுகிறார். வருங்கால மகிமையான வாக்குத்தத்தங்கள் நம்மை மெய்சிலிர்க்க வைத்து, உணர்வூட்டக்கூடியதாக இருந்தாலும், நம்முடைய பூமிக்குரிய நடைக்காகக் கொடுக்கப்படும் வாக்குத்தத்தங்கள் வெற்றிகரமாக இயேசுவின் சாயலாக மாறுவதற்கு இன்றியமையாததாக உள்ளது.

### தேவனின் மகிமைக்காக கனிகொடுத்தல்

இயற்கையான இந்த உலகத்தில் எந்தக் காரியத்தையும் பலனுடையதாக வளர்ப்பதற்குச் சரியான திட்டமிடுதல், காலம், உழைப்பு மற்றும் ஏராளமான வளர்ச்சியை உறுதிப்படுத்தும்படிக்குப் பேணுதல் தேவைப்படுகிறது.. அதுபோல ஒரு கிறிஸ்தவ குணங்களின் வளர்ச்சிக்கும் இவைகள் உண்மையாக தேவைப்படுகிறது. நம்முடைய பரம தந்தை திராட்சத்தோட்டக்காரர் ஒரு புதிய சுபாவத்தைப் பெறும்படி நம்முடைய இருதயங்களில் விதையை நாட்டியிருக்கிறார் (1 பேதுரு 1:3). மேலும், "நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" (பிலிப்பியர் 1:6) என்று அவர் வாக்களித்திருக்கிறார். தொடர்ந்து அவர் நடத்தக்கூடிய காரியங்களுக்கு நாம் நாளுக்கு நாள் அவரைத் துதிக்கலாம். "இப்படியிருக்க, சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன் மாரியும் பின் மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்" (யாக்கோபு 5:7). ஒரு மகிமையான அறுவடைக்காக தேவன் 2000 வருஷங்களாக அவருடைய தோட்டத்தைப் பேணி காத்துக்கொண்டு ஆவலோடும், பொறுமையோடும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். முழுமையாக நம்முடைய இருதயத்தை நாம் அவருக்கு அர்ப்பணிக்கும் போது, நம்முடைய அன்பான பிதா, நமக்குள் அவருடைய வேலைகளை நிறைவு செய்வதற்கு, தேவையான சகலத்தையும் கொடுப்பதற்கு வாக்களித்திருக்கிறார். நித்தியத்திற்கும் நம்முடைய பரலோக பிதாவுக்கு மகிமையைச் சேர்க்கக்கூடிய ஒரே சிந்தையே நம்முடைய உச்சக்கட்டமான விருப்பமும், அதை வளர்க்கக்கூடிய முயற்சியுமாக இருக்க வேண்டும்.

### நாம் வளர்வதற்கு உதவியாக தேவன் அவருடைய ஆவியை நமக்கு வாக்களித்திருக்கிறார்

"தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்" (பிலிப்பியர்

2:13) என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியிருக்கிறார். இயேசு தம்முடைய மனித பரிபூரணத்தில் தேவ ஆவியை அளவில்லாமல் பெற்றுக்கொண்டார் (யோவான் 3:34). இதற்கு எதிரிடையாக நம்முடைய விழுந்துபோன சுபாவத்தின் வரம்புக்கு உட்பட்ட நம்முடைய ஆற்றல் தடுத்து இடறல் உண்டாக்குகிறது. ஆகவே தொடர்ந்து தேவனுடைய ஆவியினால் நிரப்பப்பட்டுக் கொண்டிருப்பதற்கு அவருடைய வார்த்தைகளைப் படித்து அதை நடைமுறைப்படுத்துவது மிக அவசியமானதாக இருக்கிறது. "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா" (லூக்கா 11:13) என்று நம்முடைய ஆண்டவர் கூறும்போது, அவருடைய வார்த்தைகள் எவ்வளவு நம்பிக்கையூட்டக்கூடியதாக உள்ளது. "இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோமர் 8:11). நம்முடைய சரீரங்கள் பரிசுத்த ஆவி வாசம் செய்யும் ஆலயம் என்றும், அதை விலைமதிக்க முடியாத கிரயத்தைக்கொடுத்து தேவன் நமக்கு பரிசளித்திருக்கிறார் என்பதையும் பவுல் நமக்கு 1 கொரியந்தியர் 6:19, 20-ஆம் வசனங்களில் நினைப்பூட்டுகிறார். உண்மையில் இது தேவனிடத்திலிருந்து வந்த வார்த்தையினால் தெரிவிக்கமுடியாத மிகப்பெரிய பொக்கிஷமாகும்!

கூடுதலாக கிறிஸ்துவின் சாயலில் வளர்ச்சியடைவதற்கு நம்முடைய ஆண்டவரின் வாழ்க்கையையும், வார்த்தைகளையும், உபதேசங்களையும் படித்தால் மட்டும் போதாது, அவருடைய உள் எண்ணங்களையும் மற்றவர்களோடு அவர் பழகினவிதங்களையும் நாம் ஆராய்ந்து அறிந்து கொள்வது அவசியம். "நம்முடைய விசுவாசம் கர்த்தர் இயேசுவின்மேல் வைத்திருக்க வேண்டும்" (எபிரெயர் 12:2). "நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்" (எபிரெயர் 3:1) என்று நமக்குச் சொல்லப்படுகிறது. நம்முடைய ஆண்டவரின் வாழ்க்கையின் மாதிரியை நாம் நம்முடைய வாழ்க்கையில் பொறுத்தினால், நாம் படிப்படியாக அவரைப்போல சிந்திக்கவும், கிரியை செய்யவும், பேசவும் துவங்குவோம்.

### தேவனுடைய வாக்குத்தத்தங்களை நித்தமும் உரிமைகோருதல்

தேவனுடைய அற்புதமான வாக்குத்தத்தங்களைத் தங்களுக்குச் சொந்தமானவைகளாகக் கோருவதே பலருக்கு மிகப்பெரிய சவாலாக உள்ளது. தேவனுடைய வாக்குத்தத்தங்களைத் தனிப்பட்ட விதத்தில் உரிமைகோருவதே, ஆண்டவரிடத்தில் முழுமையாக தங்களை அர்ப்பணித்தவர்களுக்கு ஆதாரமாக இருக்க வேண்டும்! "நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே" (எபிரெயர் 10:23) என்று பவுல் நம்மை ஊக்குவிக்கிறார்.

தேவனுடைய வாக்குத்தத்தங்களினால், நாம் நன்மை அடைவதற்கு தேவனுடைய வாக்குத்தத்தங்களை நாம் அறிந்திருக்க வேண்டும்! நம்முடைய சிந்தை ஓய்ந்திருக்கும் போதெல்லாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களிடமாக திரும்பும்படிக்கு அவைகளை நாம் வாசிப்பதற்கு நேரத்தைச் செலவிட்டால் மட்டும் போதாது, அதை மனதில் பதிய வைத்து, ஆராய்ந்து அவைகளை தியானம் செய்வதற்கு காலம் செலவிட வேண்டும். நாம் அனுமதித்தால் இந்த உலகம், மாம்சம் மற்றும் சாத்தான் நம்முடைய சிந்தையை நிரப்புவதற்கு ஏராளமானக் காரியங்களை கொண்டுள்ளது. வனாந்தரத்தில் சாத்தானால் இயேசு சோதிக்கப்படும்போது, நமக்கு ஒழுக்கமும், நன்கு கற்றறிந்த உறுதியான சித்தம் செய்வதற்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக சுவர் ஏற்படுத்தினார். ஒவ்வொரு சோதனையின் போதும் "எழுதியிருக்கிறபடி" என்று பதிலளிப்பதற்கு ஆற்றலுடையவராக இருந்தார் (மத்தேயு 4:1-11).

### வளர்ச்சியைப் பற்றி நம்முடைய ஆண்டவரின் பாடம்

நம்முடைய ஆண்டவரின் சிறந்த ஒரு பிரசங்கம் யோவான் 15-ஆம் அதிகாரத்தில் நமக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் பிதாவாகிய தேவனை ஒரு தோட்டக்காரருக்கு ஒப்பிட்டு அவர் நம்முடைய வாழ்க்கையில், செய்யக்கூடியவைகளையும், நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று கேட்பதாகவும் இயேசு கூறுகிறார்.

"நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கனி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி

எதுவோ, அது அதிக கனிகளைக்கொடுக்கும்படி, அதைச் சுத்தம் பண்ணுகிறார். நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள். என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்க மாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திரா விட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்துபோவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோகும். நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள். பிதா என்னில் அன்பாயிருக்கிறது போல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந் தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள். என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும் படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும் படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன். நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது." (யோவான் 15:1-12).

## அவருடனே நிலைத்திருக்க தினசரி ஒழுக்கமும் கீழ்ப்படிதலும் தேவை

திராட்சச்செடியின் பிரசங்கத்தைப் பொறுத்த வரையில் திராட்சச்செடியோடு இணைந்திருந்தால், எல்லாவற்றிற்கும் மேலான தேவனுடைய வழி நடத்தலும், ஆலோசனையும் கிடைக்கும் என்ற வாக்குத்தத்தை இயேசு தம்முடைய சீஷர்களுக்கு ஆறுதலாகக் கூறினார். ஒரு திராட்சக்கொடி தரையில் படருவதை ஒரு தோட்டக்காரர் கண்டால், அவர் உடனே அதைக் கழுவி சுத்திகரித்து, மேலே தூக்கிக் கட்டி வைப்பார். அந்தக் கொடி அதிகப் பலனை கொடுக்கும் படியாக இக்காரியம் செய்யப் படுகிறது. இந்தப் பூமிக்குரிய கவர்ச்சிகளிலிருந்து தேவன் நம்மைத் தூக்கி எடுத்து நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஏற்ற ஒரு சூழ்நிலையை தேவன் எவ்வாறு ஏற்படுத்துவார் என்று இந்த உருவகம் காட்டுகிறது.

நம்முடைய அன்றாட வாழ்க்கையில், நாம் எவ்வளவு பேசினாலும், பழகினதையே செய்வோம். அது நம்முடைய காலை நடைமுறையானாலும் சரி, புசிப்பு, உடுப்பு மற்றும் நம்முடைய நேரங்களை நாம் செலவிடும் விதங்களைத் தேர்வு செய்வதிலும் சரி, நாம் அனைவரும், "பழகினதையே செய்யும் ஜீவிகளாக" நாம் விழுந்துபோன சரீரத்தில் இருப்பதினால், நம்முடைய பலவிதமான பழக்க வழக்கங்கள் ஆண்டவரின் ஆவிக்கும், பலியின் ஆவிக்கும் விரோதமாகவே உள்ளது. ஆண்டவருடைய வார்த்தைகள் மற்றும் அவருடைய வாக்குத்தத்தங்களை மையமாகக் கொண்டு நம்முடைய முயற்சிகளில் பயிற்சி பெற்றால் மட்டுமே, நம்முடைய புதிய சிந்தையை கிறிஸ்துவுக் குள்ளாகக் கட்டுப்படுத்தி, நம்முடைய பாவமுள்ள மாம்சத்தின் பழக்க வழக்கங்களை புதிய பழக்கங்களைக் கொண்டு மேற்கொள்ளலாம். நாம் இதைச் சுறுசுறுப்புள்ள மனரீதியான ஒரு பயிற்சியாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் திராட்சச்செடியில் நிலைத்திருப்பது இதையே சார்ந்திருக்கிறது. "ஒரு சிந்தையை விதைத்தால், ஒரு கிரியையை அறுவடைச் செய்யலாம், ஒரு கிரியையை விதைத்தால், ஒரு பழக்கத்தை அறுவடை செய்யலாம், ஒரு பழக்கத்தை விதைத்தால் ஒரு குணத்தை அறுவடை செய்யலாம். ஒரு குணத்தை விதைத்தால் ஒரு இலக்கை அறுவடை செய்யலாம்."

## நம்மை நறுக்குவதற்கு தேவனுடைய வாக்குத்தத்தம்

நறுக்கப்படுவதின் பொருள் ஒரு செடியைக் காயப்படுத்துவதற்காக அல்ல, அது அதிகமான கனிகளைக் கொடுக்கும்படிக்கே சுத்திகரிக்கப் படுகிறது. நம்முடைய வளர்ச்சிக்காக நம்முடைய அனுபவங்களின் சிறிதான விபரங்களையும் நம்மை மேற்பார்வையிட்டு, பேணிகாப்பதற்கான வேதனையான பயிற்சிகளை நம்முடைய ஆண்டவர் நமக்காக ஏறெடுப்பதற்காக நாம் அவருக்கு எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். "மிகப்பெரிய தோட்டக்காரர் கிறிஸ்துவின் கொடிகளை நறுக்கும் போது, சில நேரங்களில் பூமிக்குரிய சொத்துக்கள் அல்லது உடைமைகளை எடுத்துவிடுவார் அல்லது சில நேரங்களில் செல்வ செழிப்போடு இருக்கும் திட்டங்களையும், ஏற்பாடுகளையும் அவர் தடை செய்யலாம். சில நேரங்களில் உபத்திரவங்களை

நமக்கு அனுமதிப்பதன் வழியாகவும், சில நேரங்களில் நம்முடைய பெயர், புகழை இழக்கும்படியாகவும் நம்மை நறுக்குகிறார். தேவன் எதிர்பார்க்கும் அதிகபட்சமான கனிகளைக் கொடுக்காதபடிக்கு, நம்மை தடைசெய்யக்கூடிய நம்முடைய இருதயத்தில் மிக உறுதியாக ஐக்கியப்பட்டிருக்கும் நட்புறவுகளையும் இழக்க அனுமதித்து நம்மை நறுக்குகிறார். சில நேரங்களில் நமக்குச் சில வியாதிகளை அனுமதித்து நம்மை நறுக்குகிறார். "நான் துயரப்படுவதற்கு முன் வழி தவறினேன்" என்று ஒரு தீர்க்கதரிசியும் சொல்லியிருக்கிறார். இன்னும் பல ஆண்டவருடைய ஜனங்கள் தங்களுடைய உபத்திரவத்தின் படுக்கையில் பல விலையேறப்பெற்ற பாடங்களைக் கண்டுபிடித்தார்கள்," என்று பாஸ்டர் ரசல் தன்னுடைய மறுபதிப்பில் (3545) தேவனுடைய நறுக்கும் அனுபவங்களைப் பற்றிய சில ஆழமான சிந்தனைகளை எடுத்துரைக்கிறார். சிலர் தேவனுடைய பெரிதான கிருபையினால், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பார்கள். ஆவியின் கனிகளில் வளரும்படியாக வேதத்தை ஆராய்வதற்கும், அவரைப் பிரதிபலிப்பதற்கான தேவைப்படும் காலம் கொடுக்கப்படுகிறது. எப்படிப்பட்ட அனுபவமாக இருந்தாலும் சரி, நறுக்குதலுக்கானக் காரியங்கள் உற்சாகம் அளிக்கக்கூடிய ஊற்றாக இருக்க வேண்டும். ஏனெனில், இவைகள் அனைத்தும் பிதா நம்மில் அன்புகூர்ந்து, நம்முடைய உயர்வான நலனுக்காக, நம்மைப் பேணி காப்பதற்கான ஆதாரங்களாக உள்ளது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

**மனத்தாழ்மையில் வளர்ச்சியடைதல்**

மற்ற அனைத்து ஆவிக்குரிய கனிகள் வளர்ச்சியடையச் செய்வதற்கு மனத்தாழ்மை என்ற குணம் முன்னதாகவே அவசியமாகத் தேவைப் படுகிறது.

"ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையி னாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையான வர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கான வைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார்" (பிலிப்பியர் 2:3-9). அதுபோல நாம் ஒவ்வொருவரும் தாழ்மையை அணிந்து கொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு நமக்கு கட்டளையிடுகிறார் (1பேதுரு 5:5). மனத்தாழ்மையுள்ள ஒரு ஊழியக்காரனுடைய இருதயத்தை, நாம் வளர்த்துக்கொண்டால் மட்டுமே, நம்முடைய பரலோக பிதாவுக்கும், ஆண்டவராம் இயேசுவுக்கும், இப்போது நம்முடைய சகோதரர்களுக்கும் இராஜ்யத்தில் இந்த உலகத்தின் மனுக்குலத்திற்கும் ஏதோ ஒருவகையில் பயனுள்ளவர்களாக இருப்போம் என்று நம்பலாம். இந்த ஒரு குணலட்சணத்தையே நம்முடைய ஆண்டவர் பெற்றிருந்ததின் விளைவாகவே அவரைப் பிதாவின் வலது பக்கத்தில் உயர்த்தியது. .

**அறிவில் வளர்ச்சியடைதல்**

"சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத்தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும், சந்தோஷத்தோடே கூடிய எல்லாப்பொறுமையும் நீடியசாந்தமும் உண்டாவதற்கு மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம். ஒளியிலுள்ள பரிசுத்தவான் களுடைய சுதந்திரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவர்" (கொலோ 1:10-12).

தேவனுடைய அறிவில் வளர்ச்சியடைவது, தேவனுக்குத் தவிர்க்க முடியாத மகிழ்ச்சியைத் தரக்கூடியதாக இருக்கிறது என்று பவுல் நம்மிடம் கூறுகிறார். ஆண்டவருடைய வார்த்தை நம்மில் நிலைத்திருந்தால், மற்றவர்களுக்காக நாம் கொண்டுள்ள அன்பை அது செயலாற்றும் மற்றும் நம்முடைய பிதாவின் சித்தத்தை அறிந்து கொள்வதற்கான உற்சாகமான ஆராய்ச்சியில் நம்மை ஈடுபடுத்தும். வேதத்திலுள்ள பரிசுத்தமான எழுத்துக்கள் நமக்கு இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தின் வழியாக இரட்சிப்புக்கு வழி நடத்தும், ஞானத்தைக் கொடுக்கும் என்று 2 தீமோத்தேயு 3:16, 17-ஆம் வசனங்களில் பவுல் நமக்கு நினைப்பூட்டுகிறார். "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ள வைகளாயிருக்கிறது."

"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்." (யாக்கோபு 1:5, 6). தேவனுடைய வார்த்தைகளைப் படிப்பதற்கும், ஆராய்கிறதற்கும் நேரத்தைச் செலவிட்டு முயற்சிகளையும் ஏறெடுத்தால், அவருடைய திட்டங்களையும், நோக்கங்களையும் புரிந்துகொள்வதற்கு நம்முடைய இருதயங்களையும், சிந்தைகளையும் திறப்பதாக தேவன் வாக்களித்திருக்கிறார்.

**அன்பில் வளர்ச்சியடைதல்**

ஒரு அன்பான குடும்பத்தின் அங்கத்தினராக இருந்து, நேசிக்கப்படுவதற்கும், பராமரிக்கப் படுவதற்கும், போஷிக்கப்படுவதற்கும், ஒவ்வொரு அங்கத்தினரையும் தங்களுடைய முழுமையான ஆற்றலை அடைவதற்கு உதவி செய்து ஊக்குவிக்கும் சந்தோஷத்தைக் காட்டிலும் இன்னும் அதிகமான சந்தோஷங்கள் நமக்குண்டு. ஆண்டவருக்குள் இருக்கும் சகோதரரே நம்முடைய ஆவிக்குரிய குடும்பமாகும். இந்தக் குடும்பத்திலும் நமக்கு அதே விதமான பொறுப்புகள் கொடுக்கப் பட்டுள்ளது. அன்பு செலுத்தவும், பணி செய்யவும் ஆண்டவருக்குள் உயர்நிலையான ஆற்றலை அடைவதற்கு நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்து மகிழ்ந்திருக்கக்கூடிய அதே சிலாக்கியத்தைப் பெற்றுள்ளோம். அநேகமாக இல்லாவிட்டாலும், அன்பு, இரக்கம் மற்றும் பொறுமையில் வளர்ச்சியடைவதற்கு அதிகபட்சமான நம்முடைய ஆசீர்வாதங்கள் மற்றும் வாய்ப்புகளை நாம் நம்முடைய சகோதரர்களோடு ஏற்படும் ஐக்கியத்தினாலே பெற்றுக்கொள்கிறோம்.

"தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத் திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்." (1 யோவான் 4:12).

"நாம் சகோதரரிடத்தில் அன்பு கூறுகிறபடியால், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக் கிறோம்; சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்திலே நிலை கொண்டிருக்கிறான்." (1 யோவான் 3:14). எந்தளவில் நாம் சகோதரர்களை நேசிக்கிறோமோ, அந்தளவில் நம்முடைய ஆவிக்குரிய முதிர்ச்சி அளவிடப்படுகிறது.

"அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது." (எபேசியர் 4:15, 16). ஒருவரையொருவர் அன்புகூருதல், ஆதரவான வார்த்தைகள் மற்றும் சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தினருடைய நற்கிரியைகள், ஆரோக்கியமும், முதிர்ச்சியும் அடைந்த விசுவாசிகளின் சரீரத்தைப் பலனாகக் கொடுக்கும். இந்தக் குணங்களை நாம் நம்முடைய சபை முழுவதிலோ அல்லது நாம் நம்முடைய சகோதரர்களிடம் கொண்டிருக்கும் தனிப்பட்ட ஐக்கியத்திலோ வெளிப்படுத்த வேண்டும்.

**சமாதானத்தில் வளர்ச்சியடைதல்**

"நீங்கள் ஒன்றுக்குங்கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும். கடைசியாக, சுகோதரரே, உண்மையுள்ளவை களெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெ வைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த் தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்து கொண்டிருங்கள். நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவை களெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்" (பிலிப்பியர் 4:6-9). நம்முடைய சிந்தையில் எவைகளைப் பதிய வைக்கத் தீர்மானிக்கிறோமோ, அதுவே நம்முடைய வார்த்தைகளாகவும், கிரியைகளாகவும் வெளிப்படும். தேவனுடைய சமாதானம் நமக்குள் வாசம் செய்ய நாம் விரும்பினால், நம்முடைய சிந்தைகளில் நாம் பதிய வைக்க வேண்டியவைகளை இங்கு வரிசைப்படுத்துகிறார். இதற்குப் பயிற்சி தேவைப்படுகிறது. ஆனாலும் இது சாத்தியமானதே!

"பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும்இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாத மில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது. நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது." (யாக்கோபு 3:17, 18).

**மகிழ்ச்சியில் வளர்ச்சியடைதல்**

"என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" (யோவான் 15:11) என்று இயேசு கூறின போது அவர் எதைப் பொருள்படுத்தினார்? "இனிவரும் ஆசீர்வாதங்களின் மகிழ்ச்சியின் முன் அனுபவமாக இது இருக்கிறது. இது நம்முடைய மெய்யான சுதந்தரமாகும். நாம் விசுவாசிக்கக் கூடியவர்மேல் வைத்த நம்பிக்கையினால் இது ஊக்குவிக்கப்படுகிறது. நம்முடைய விசுவாசத்தின் கரங்களினால், இந்த கிருபையுள்ள வாக்குத்தத்தங்களை உறுதியோடு நாம் பற்றிக் கொண்டிருக்கும் வரை அவரிடமிருந்து நாம் பிரிக்கப்படுவதற்கு அவர் அனுமதிக்க மாட்டார் என்று நாம் நம்பிக்கையோடு இருக்கலாம். அவருடைய அன்பில் நாம் கீழ்ப்படிதலோடு நிலைத்திருக்க விரும்பினால், நம்முடைய பிதா நம்மைவிட்டு விலகமாட்டார் . . . எல்லா புத்திக்கும் மேலானதும், இந்த உலகம் புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டதுமான தேவ சமாதானத்தை நம்முடைய இருதயங்களில் தருவார் என்பதே தேவனுக்குள் நம்முடைய நம்பிக்கையாக உள்ளது என்று 2232 பக்கத்திலுள்ள மறு பதிப்பு கூறுகிறது.

"தேவனுடைய வார்த்தையிலுள்ள பெரியதும், விலையேறப்பெற்றதுமான வாக்குத்தத்தங்கள் மேல் நம்பிக்கை உறுதியாக இருக்கும் போது, ஒரு பாலைவனத்திலுள்ள பூக்கள் போன்று சந்தோஷங்கள் தோன்றுகின்றன. அவைகள் நம்முடைய கண்ணீர்களால் உற்சாகமூட்டப்பட்டு எழும்புகின்றன. பாலைவனம்போன்று இருக்கிற இந்த உலகம் இப்படியான சந்தோஷம், ஆசீர்வாதம் போன்ற பூக்களை உண்டாக்க முடியாது, நினைத்துக்கூடப்பார்க்க முடியாது. நம்முடைய சந்தோஷங்கள் நம்முடைய நம்பிக்கைகளைச் சார்ந்து உள்ளதுபோல, அவைகள் நம்முடைய செயல்களையும் சார்ந்து உள்ளன. நமக்கு ஒரு வாக்குத்தத்தம் வைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய நம்பிக்கை அந்த வாக்குத்தத்தமாக வைக்கப் பட்டிருக்கிறது. நம்முடைய நம்பிக்கை அந்த வாக்குத்தத்தைப் பற்றிக்கொண்டிருப்பது போதாது. திவ்விய ஒழுங்கின்படி, நமக்குள் நாட்டப்பட்டுள்ள நம்பிக்கைகள் எதிர்பார்ப்புகள் மூலம் எழும்புகின்ற சந்தோஷங்கள் மற்றும் ஜெபத்தின் மூலமும், ஆண்டவருடைய ஊழியத்தின் செயல்கள் மூலமும் பராமரிக்கப்பட வேண்டும்" (The New Creation, page 678 in English).

"ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" (2 பேதுரு 1:10, 11).

"நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்" (கலாத்தியர் 6:9).

ஜெபத்திற்கான பதில்களைப்பற்றிய வாக்குத்தத்தங்கள்

# இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஒருபோதும் நம்பிக்கையை இழக்க வேண்டாம்.



"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" (எபிரெயர் 11:6).

Paul Lagno

விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பை நாம் வளர்க்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். விசேஷமாக நம்முடைய சுத்திகரிப்பு முழுமைப் பெறுவதற்கு, அவருடைய சித்தத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்காக நம் அன்பை வளர்த்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார் (1 கொரிந்தியர் 13).

முக்கியமாக, ஜெப வாழ்க்கையின் வழியாகவும் நம்முடைய இருதயங்களிலும், சிந்தைகளிலும் அவருடைய சித்தத்தைச் செய்ய வேண்டுமென்ற விருப்பத்தோடு, தொடர்ந்து தேவனோடு ஐக்கியப் படுவதினாலும் சுத்திகரிப்பின் செயல்பாடுகள் சாத்தியமாகும். இந்தச் செயல்முறை, அர்ப்பணிக்கப்பட்ட நம்முடைய முழு வாழ்க்கையையும் பயன்படுத்திக்கொள்ளும். "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள் நீங்கள் பரிசுத்த முள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1 தெச 5:18, 4:3). இப்போது நாம் அவருடைய சித்தத்தைச் செய்து, பரிசுத்தம் அடைந்தால், பூமியிலுள்ள முழு குடும்பங்களையும் ஆசீர்வதிக்கக்கூடிய சிறப்புரிமையை வெகு மதியாகப் பெறுவோம்.

பொதுவாக நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை, சில குறிப்பான தேவனுடைய அன்பின் வெளிப்பாடோடும், குறிப்பான ஜெபங்களுக்குக் கிடைக்கப் பெற்ற தெளிவான பதில்களோடும் துவங்குகிறது.

ஈடுபலி மற்றும் திரும்பக்கொடுத்தலின் வாக்குத்தத்தங்களைப் பற்றிய விசுவாசமுள்ள ஒரு இளைஞராக மத்திய நியூ ஜெர்சியிலுள்ள ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சை பகுதியில் இரவு நேர சுற்றில் பணியாற்றிக்கொண்டிருந்தேன். நடுராத்திரியில், தன் உயிரை மாய்த்துக்கொள்வதற்கு அதிகப்பட்சமான மருந்துகளை உட்கொண்ட 13 வயது பெண்ணுக்கு சிகிச்சையளிக்கும்படிக்கு நான் அழைக்கப்பட்டேன். அவள் சுவாசிக்கவில்லை, நாடி துடிக்கவில்லை. அவள் வந்தபோது மருத்துவர்கள் மீண்டும் அவள் உயிரடைவதற்கு முயற்சித்தார்கள். மின்சார அதிர்ச்சியினாலும், மருந்துகளினாலும் நீண்ட நேரத்திற்கு ஒருமுறை அவளுடைய இருதயத்தைச் செயல்பட வைத்தார்கள். நான் ஒரு சுவாச சிகிச்சையாளராக இருந்ததினால், இந்த அழகான சிறுமிக்கு எப்போதெல்லாம் அவள் இருதயம் நின்று CPR தேவைப்பட்டதோ, அப்போதெல்லாம் மூச்சு காற்றை கைமுறையாக (manually) அவளுக்குக் கொடுப்பது என் வேலையாக இருந்தது. அப்போது அவள் கண்களைப் பார்க்கும்போது, அவளுக்காகவும் அவள் குடும்பத்தினருக்காகவும் என் உள்ளம் பரிவினால் நிறைந்தது. அவளை வாழவைக்க வேண்டுமென்று முழு இருதயத்தோடு தேவனிடம் திரும்ப திரும்ப வேண்டிக்கொண்டேன்.

பல மரண சம்பவங்களுக்குப் பிறகு மருத்துவர்களும், செவிலியர்களும் அந்தக் குழந்தை பிழைப்பாள் என்ற நம்பிக்கையை இழந்தார்கள். நீண்ட நேரம் இடைவெளியில் மட்டுமே அவள் இருதயம் இயங்கியது. சந்தேகத்திற்கு இடமின்றி அவள் பிழைத்தாலும் கட்டாயமாக அவளுடைய மூளை பாதிக்கப்படும் என்று அறிந்திருந்தார்கள்.

என்னுடைய வேலை முடிந்தபோது அவள் உணர்ச்சியற்ற நிலையில் (coma) இருந்தாள். ஆனால் இறுதியாக அவளுடைய இருதயம் சரியாக இயங்கத் துவங்கியது. அவளுடைய நுரையீரலில் பொறுத்தப்பட்ட செயற்கையான சுவாச குழாயின் வழியாக (mechanical respirator) அவள் சுவாசித்துக் கொண்டிருந்தாள்.

மறுநாளில் அவசர சிகிச்சை அறைக்குள் நான் பிரவேசித்தபோது, அதற்கு முன் இரவில் எதுவும் நடக்காததுபோல எல்லா குழாய்களும் நீக்கப்பட்டு, படுக்கையில் அமர்ந்தவாரே பணியாளர்களோடு நகைச்சுவையாகப் பேசிக்கொண்டிருந்த அந்தச் சிறுமியைக் கண்டு நான் திகைத்துப் போனேன்! அவரைக் காப்பாற்ற வேண்டும் என்று முயற்சித்த நாங்கள் அனைவரும் இப்படிப்பட்ட ஒரு ஆச்சரியமான மறுபிழைப்பைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தோம். உடனடியாக அங்கிருந்த மருத்துவர்கள் மற்றும் பணியாளிடமும் என்னுடைய உணர்ச்சியுள்ள ஜெபங்களைக் குறித்தும் என்னுடைய ஜெபங்களினிமித்தமாகவே அவள் ஜீவனோடிருக்கிறாள் என்று தைரியமாகவும் அவர்களிடம் கூறினேன். நாம் ஒரு அற்புதத்திற்காக ஜெபித்தேன் என்றும், தேவன் என் ஜெபங்களுக்குப் பதிலளித்தார் என்றும் அந்தச் சிறுமியோடும், அவளுடைய குடும்பத்தினரோடும் பேசினேன்.

இந்த அனுபவத்தினாலும், இன்னும் பல ஜெபங்களுக்குக் கிடைத்த பதில்களினாலும் புதிதாக அஸ்திபாரமிடப்பட்ட என்னுடைய விசுவாசம் உறுதிப்பட்டது. முதிர்ச்சியடையாத ஒரு கிறிஸ்தவனாக இருந்த எனக்குச் சில இக்கட்டான சூழ்நிலையில் தேவன் என்னுடைய ஜெபங்களுக்குப் பதில் அளிப்பார் என்ற நம்பிக்கை அறிவிலும், கிருபையிலும் வளர்ச்சியடைவதற்கு ஊக்குவித்தது. நான் தேவனிடம் ஒரு அற்புதத்திற்காக ஜெபித்தேன். அவர் எனக்குப் பதிலளித்தார். அந்த அற்புதம் எனக்காக அல்ல, உபத்திரவப்பட்டுக்கொண்டிருந்த வேறொருவருக்காக வேண்டினேன். உயிர்த்தெழுதலின்மேல் நான் கொண்டிருந்த புதிய விசுவாசத்தைத் தைரியமாக சாட்சிக் கொடுப்பதற்கு இந்த அற்புதம் என்னை அனுமதித்தது.

இப்போது நான் ஒரு முதிர்ச்சியடைந்த விசுவாசியாக நான் வேறுவிதமாக ஜெபித்து, "இது உமக்குச் சித்தமானால்" என்று சேர்த்து ஜெபிப்பேன். ஆயினும் பல வருடங்களுக்கு முன் நடந்த சம்பவமாக இருந்தாலும், அந்த இரவில் என்னுடைய இருதயத்திலிருந்த அதே உணர்வுகளை நான் எப்போதும் பெற்றிருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

சுவிசேஷ யுகம் மற்றும் ஆயிரவருட ஆட்சியின்போது சம்பவிக்கும் மிகப்பெரிய அற்புதங்களை நிழலிடும்படியாக இயேசு இரக்க குணமுடையவராக பல அற்புதங்களைச் செய்தார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். "பர்னபாவை யூப்பித்தர் என்றும், பவுல் பிரசங்கத்தை நடத்தினவனானபடியினால் அவனை மெர்க்கூரி என்றும் சொன்னார்கள்" (யோவான் 14:12-14) என்று அவர் நம்மிடம் கூறினார். இப்போது வியாதியுள்ளவரை சுகப்படுத்தல் அல்லது மரித்தோரை உயிரோடு எழுப்புவதைக் காட்டிலும் பெரிதான அற்புதம் எதுவாக இருக்க முடியும்? என்னுடைய அனுபவத்தில் அந்தச் சிறுமியின் குருடாயிருக்கும் அவளுடைய புரிந்துகொள்ளுதலின் கண்களைத் திறந்திருந்தால் அல்லது செவிடாக இருந்த விசுவாசத்தின் காதுகளைத் திறந்திருந்தேனானால் அது மிகப்பெரிய அற்புதமாக இருந்திருக்கும்.

உடல் ரீதியான சுகம் பெறக்கூடிய அற்புதங்களுக்கான ஜெபங்களை ஒரு முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர் ஜெபிப்பது அரிதானது. ஆனால் இந்த ஜெபம் எந்தவிதத்திலும் வல்லமை குறைந்தது அல்ல! தேவன் நமக்காக வைத்திருக்கும் அவருடைய சித்தத்திற்கு இசைவாக நாமும் மற்றவர்களும் நெருங்கி வருவதற்கு தேவையான ஆவிக்குரிய சுகம், புரிந்துகொள்ளுதல், பலம் மற்றும் ஞானத்திற்காக "விசுவாசத்தோடு நம்பி" விண்ணப்பிக்கிறோம்.

**கேட்பது மற்றும் பெற்றுக்கொள்வதைப் பற்றிய வசனங்கள். நாம் எவ்வாறு கேட்கிறோம்?**

"ஆனால்" என்ற சிறிய வார்த்தையின் நிபந்தனையோடு நமக்கு வியக்கத்தக்க வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. "திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (யாக்கோபு 1:22). ஆண்டவர் நம்முடைய கிரியைகளை ஆசீர்வதிப்பார்.

நாம் செய்பவர்களானால் நாம் கிரியை நடப்பிப்பவர்களாக இருப்போம். நாம் கேட்கக்கூடியவர்களால் (கிரியை செய்யக் கூடியவர்கள்) . . . நாம் பெற்றுக்கொள்வோம். நாம் தேடக்கூடியவர்களாக இருந்தால் (கிரியை செய்யக்கூடியவர்கள்) . . . நாம் கண்டடைவோம். நாம் தட்டுபவர்களாக இருந்தால் (கிரியை செய்யக்கூடியவர்களாக) . . . வாய்ப்புகளில் வாசல்கள் திறக்கப்படும் (மத்தேயு 7: 7, 8).

நம்புதல் என்ற வார்த்தையே ஜெபத்திற்கு ஒரு முக்கிய அம்சமாகும் (Strong's 4100). இதற்கு நம்முடைய ஆண்டவரின் உட்கருத்துக்களின்மேல் "உறுதியான நம்பிக்கைக்கொள்வதாகும்." ஜெபம் மற்றும் அதற்கேற்ற கிரியைகளின் வழியாகவும் நமக்காக நிறைவேறக்கூடிய தேவ சித்தத்திற்குத் தேவையான சகலத்தையும் நாம் பெற்றுக்கொள்ளலாம்.

முக்கியமாக இரண்டு உண்மைகளினால் அப்போஸ்தலர் இணங்கப் பண்ணப்படுத்தப்பட்டார் என்று அவர் கூறுகிறார். "இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன். (1) இயேசு கிறிஸ்து மற்றும் (2) அவர் சிலுவையில் அறையப்படுதல்" (1 கொரிந்தியர் 2:2).

(1) இயேசு கிறிஸ்து அனைவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார் - அவருடைய ஈடுபலியினால் அனைவரும் உயிர்த்தெழுதலைப் பெறுவார்கள் - எந்தவிதமான தீமையான ஆட்சிகள் அல்லது சாத்தானின் பாதிப்புகளினால் ஏற்படும் சோதனைகளின்றி வாழ்வதற்கு அனைவருக்கும் ஒரு முழுமையான வாய்ப்பு கிடைக்கும்.

(2) மிகப் பெரிய மத்தியஸ்தர் (இயேசு மற்றும் சபை) சிலுவையில் அறையப்படுதலின் செயலால் (நாமும் அவரோடுகூட சிலுவையில் அறையப்பட்டிருக்கிறோம். மத்தேயு 16:24; கலாத்தியர் 2:20). முழு மனுக்குலத்தையும் ஆசீர்வதிப்போம். சுவிசேஷ யுகத்தின்போது நிழலான ஒப்புரவாகுதலின் நாளில் கொடுக்கப்பட்ட பாவநிவாரண பலிகளின் வழியாக இந்த ஒரு பலியின்

வேலை நடைபெற்றுக்கொண்டுள்ளது. கீழ்ப்படிதல் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு கிறிஸ்துவின் இராஜ்யத்தில் குணங்களில் வளர்ச்சியடையக்கூடிய ஆசீர்வதிக்கப்பட்ட மனுக்குலமும், திரும்பக் கொடுக்கப்பட்ட உலகத்தில் நித்தியமாக ஜீவிப்பார்கள்.

ஈடுபலி மற்றும் திரும்பக்கொடுத்தல் என்ற இந்த இரண்டு அஸ்திபாரமான கோட்பாடுகள், தேவனுடைய சித்தத்திற்குத் தங்களை முழுமையாக அர்ப்பணித்தவர்களைத்தவிர மற்ற அனைவருக்கும் மறைக்கப்பட்ட இரகசியமாக உள்ளது. "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்; பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்" (2 கொரிந்தியர் 5:14, 15).

நாம் உண்மையில் நம்பி, உறுதியோடு இந்த இரண்டு காரியங்களை விசுவாசித்தால் இப்போது ஜெபத்தின் வல்லமையின் வழியாக நம்முடைய வாழ்க்கையில் "மலைகளைப் பெயர்க்கத்தக்க விசுவாசத்தையும் இனிவருங்காலத்தில் இந்த உலகத்தின்மேல் நடைபெறும் தேவனுடைய இராஜ்யத்தில் தேவைப்படும் உண்மையான வல்லமையைப் பெறுவோம்" (மத்தேயு 21:21-22).

கேட்பதினாலும், தேடுவதினாலும், தட்டுவதினாலும் - கிரியை செய்துகொண்டு, "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலிப்பியர் 4:13) என்ற வாக்குத்தத்தத்தின்மேல் நம்முடைய விசுவாசத்தை உறுதிப்படுத்திக் கொள்கிறோம்.

**நம்பிக்கையோடும், தைரியத்தோடும் - அவருடைய சித்தத்திற்கு இசைவாக**

"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 5:14, 15). "அவருடைய சித்தத்தின்படி" என்று ஒவ்வொரு கிறிஸ்தவனும் கேட்பது சவாலான காரியமாக உள்ளது. நம்முடைய விழுந்துபோன நிலையினிமித்தம் இது எப்போதும் சாத்தியமாக இருப்பதில்லை. இதன் விளைவாக, அவருடைய சித்தம் நமக்குத் தெளிவாகப் புரியும் பட்சத்தில், நம்முடைய விருப்பங்களையும், ஜெபங்களையும் மாற்றிக்கொள்வதற்கு நாம் விருப்பமுள்ளவர்களாக இருக்க வேண்டும். நம்முடைய இருதயங்கள் இப்படிப்பட்ட நிலைபெறும்போது, அவருடைய பதில்கள் உறுதிப்படுகிறது.

"நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க்கிருபாசனத் தண்டையிலே சேரக்கடவோம்" (எபிரெயர் 4:16).

"அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது" (எபேசியர் 3:12).

"நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டிருந்து, அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம்" (1 யோவான் 3:21, 22). நம்மால் முடிந்தவரையில் தேவனுடைய கோட்பாடுகளுக்கு ஏற்றவாறு நம்முடைய வாழ்க்கையை வாழ வேண்டும். பாவ வாழ்க்கையைப் பகிரங்கமாக வாழ்ந்துகொண்டு, நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்கப்படும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.

**ஆயினும்-மனத்தாழ்மையோடு**

"நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்" (மத்தேயு 6:6).

"கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" (யாக்கோபு 4:10).

**நாம் எதற்காக விண்ணப்பிக்கிறோம்?**

❖ பரிசுத்த ஆவி. "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா" (லூக்கா 11:13).

❖ ஞானம் "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக்

கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்" (யாக்கோபு 1:5, 6).

❖ இரக்கத்திற்கும் உதவிக்கும் வேண்டுதல் "ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" (எபிரெயர் 4:16).

வியக்கத்தக்க இந்த வாக்குத்தத்தங்கள் முழுமையான வல்லமையோடு நமக்குள் கிறிஸ்துவின் குணலட்சணங்களை வளர்க்க முடியும். சில நேரங்களில் சுயநல எண்ணத்தோடும், தேவனை மகிழ்விக்க விருப்பம் இல்லாமலும் நாம் "தகாதவற்றைக் கேட்கலாம்." "நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்" (யாக்கோபு 4:3). சுயநலமான நோக்கங்கள், எப்போதுமே தனிப்பட்ட பிரச்சனைகளுக்கும், சபையில் குழப்பங்களுக்கு வழிநடத்தும். நம்முடைய விண்ணப்பங்கள் எப்போதும் முழுமையான மன்னிப்பைத் தேட வேண்டும். இருதயத்தில் முழுமையான மன்னிப்பை வேண்டி நாம் விண்ணப்பிக்க வேண்டும்.

❖ மன்னிப்புக்கான ஜெபம் ... "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" (மத்தேயு 6:12).

நாம் அனைவரும் திரும்பிக்கொடுக்க முடியாதளவுக்கு தேவனிடம் கடன்பட்டுள்ளோம். ஆனால் இயேசு தம்முடைய மரணத்தின் வழியாக நம்முடைய கடன்களைச் செலுத்தினார். தேவன் நம்முடைய பாவங்களுக்கான மன்னிப்பை ஏற்றுக்கொண்டதினால், விசுவாசத்தினால் நாம் நீதிமான்களாக ஆக்கப்பட்டு மரண தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்பட்டோம். நாம் பெற்ற மன்னிப்பை நாம் தெளிவாகப் புரிந்துகொண்டு அதனால் தேவனும், இயேசுவும் நமக்கு மன்னிப்பைக் கொடுத்து, மாதிரியாக முன் வைத்த அதே இரக்கத்தை நமக்குள்ளும் வளர்த்துக்கொள்ள வேண்டும். இதுவே மத்தேயு 18-ஆம் அதிகாரத்திலுள்ள பாடம். குழந்தைகளைப்போல மனத்தாழ்மையுள்ளவர்களாக மன்னிக்கக் கற்றுக்கொண்டு இரக்கம் நம்முடைய இருதயத்தை இலகுவாக்கப் பயிற்சி பெற்றால் மட்டுமே நாம் மன்னிக்கப்படுவோம்.

"அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், இரண்டுபேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" (மத்தேயு 18:19-20) என்று இயேசு மன்னிப்பைக்குறித்துப் பேசினதை பேதுரு புரிந்துகொண்டார்.

இயேசுவின் வார்த்தைகளுக்கு பேதுரு உடனடியாகப் பதில் கேள்வி எழுப்பினார். "ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதரமட்டுமா என்று கேட்டான்" (21) இதற்கு இயேசு அற்புதமாகப் பதிலளித்தார். "ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபது தரமட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்" (22). மற்றொரு வார்த்தைகளில் சொல்லப் போனால் மன்னிப்பதற்கு எல்லையே இல்லை.

ஆனால் இரண்டு பேர் ஒரு காரியத்தைக் குறித்து ஒருமித்து விண்ணப்பித்தால், அவர்களுக்காக தேவன் செய்வார் என்று சொன்னதற்கான பொருள் என்ன? இதற்கான பதில் 16-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டது போல் தோன்றுகிறது. இரண்டு சகோதரர்கள் மத்தியிலுள்ள வேறுபாடுகளை, கையாளக்கூடிய கட்டளைகளை அங்கு ஆண்டவர் கொடுத்தார். இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் தகுதியுள்ள ஒரு முடிவை ஏற்றுக் கொள்ளும் போது, அந்தக் காரியத்தைக் குறித்த முடிவை தேவன் அங்கீகரித்தல் என்று ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இந்தக் காரியம் முழு சபைக்கு முன் கொண்டு வரப்பட்டாலும் இதே கோட்பாடு செயல்படுத்தப்படும் என்பது உண்மையே. இதில் ஏதோ ஒரு சாரார் சாட்சிகளின் முடிவை ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில், அவர்கள் மற்ற சாராரை மன்னிக்கவில்லை என்று குறிப்பிடுகிறது. இது ஒரு நலமற்ற (உகந்ததாயிராத) ஆவிக்குரிய நிலையை உருவாக்கும். மன்னிப்பு மத்தேயு 18-ஆம் அதிகாரத்தின் முக்கிய இலக்காகும்.

### சிநேகிதருக்கும் பகைவர்களுக்கும்

அனைவருக்காகவும் நாம் கொண்டுள்ள அன்பைப் பலப்படுத்தி அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்று தேவனுடைய வார்த்தைகள் நம்மை எச்சரிக்கிறது. "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக் காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்

களுக்ககவும் ஜெபம்பண்ணுங்கள்"(மத்தேயு 5:44). நம்மை மனமறிந்து பகைத்து உபத்திரவப்படுத்துபவர்களுக்கு நாம் எப்படிப்பட்ட ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும்? அவர்களின் இருதய தன்மையை இலகுவாக்குவதற்கு உதவிச் செய்யும்படிக்கு வேண்டுதல் செய்யலாம். அல்லது நாம் செய்வதையும் சொல்லுவதையும் அவர்கள் புரிந்துகொள்ளுவதற்கு உதவிச் செய்யும்படி அவர்களுக்காக விண்ணப்பிக்கலாம். அவர்களின் கிரியைகள் இந்த உலகத்தின் சிந்தனைகளால் தாக்கப்பட்டதை நாம் அறிந்திருந்தால் மன்னிப்பை வேண்டி ஜெபிப்பதும் பொருத்தமாக இருக்கும்.

"நான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம்பண்ணி . . . மேலும், உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும்," (பிலிப்பியர் 1:4, 9) மற்றவர்களுக்காக எப்போதெல்லாம் ஜெபிக்கலாம் என்பதற்கு இங்கு ஒரு ஆர்வமூட்டும் கருத்துச் சொல்லப்படுகிறது. தேவனுடைய அறிவையும், புரிந்துகொள்ளுதலையும் அதிகரிக்கக்கூடிய ஜெபமானது, அன்பில் அதிகமான வளர்ச்சியடைய உதவிச்செய்யும்.

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோதிரஞ்செலுத்தி, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்" (கொலோசெயர் 1:5). "எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறோம் (2 தெசலோனிக்கேயர் 1:12).

மற்றவர்களுக்காக ஜெபிப்பதின் முக்கியத்துவத்தைப்பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் அடிக்கடி குறிப்பிடுகிறார். இப்படிப்பட்ட ஜெபங்கள் மற்றவர்களுக்கு ஆசீர்வாதங்களை மட்டுமல்ல, மற்றவர்கள்மேலுள்ள இரக்கம் அதிகரிப்பதினால் அவர்கள்மேல் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள உதவுகிறதினால் ஜெபிக்கக்கூடிய நமக்கும், மிகப் பெரியளவில் நலன் தரக்கூடியதாக உள்ளது.

**ஜெபத்திற்கான பதில்களைப்பற்றி மூப்பரின் ஆலோசனை**

"தேவனுடைய சித்தம் அறிந்துகொள்ளவும், அவர் எதை வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் என்றும் எதை வாக்களிக்கவில்லை என்பதையும், நாம் எதைக் கேட்கலாம் என்றும் எதைக் கேட்கக் கூடாது என்றும் இவைகளை உறுதிப் படுத்திக் கொள்வதற்கு வேதத்தை ஆராய வேண்டும். தங்களை முழுமையாக அர்ப்பணித்தவர்கள் அவர்களைப் பொறுத்தவரையில் தேவனுக்குப் பிரியமானவைகளைத் தவிர எதையும் செய்வதற்கு விரும்பமாட்டார்கள் 'என்னுடைய சித்தம் அல்ல; உம்முடைய சித்தமே ஆகக்கடவது' என்று அவர்கள் ஜெபிப்பவர்கள், இந்த நிலையை அடைந்த பின், தெய்வீக வாக்குத்தத்தை மதித்தும், தெய்வீக சித்தத்திற்கு முழுமையாக ஒப்பு கொடுத்தும் ஒருவர் எதைக்கேட்டாலும் அவற்றை தேவன் வேண்டுதலுக்குப் பதிலாக அளிக்கப் பிரியமாக இருப்பார் என்பதை நம்மால் நம்பி உணரமுடியும்" (R3663).

• "நம்முடைய ஜெபங்களுக்கான பதில் எப்பொழுதும் உடனடியாக நமக்கு அளிக்கப் படுவதில்லை, நம்முடைய வேண்டுதல் தேவனுடைய வாக்குத்தத்தங்களுடன் இசைவாக இருக்கிறது என்று உறுதிப்படுத்தி நம் இருதயத்தில் எப்போதும் இருக்கும் அந்தக் காரியம் ஒரு தொடர் ஜெபமாக மாறி, நம் வாழ்க்கையில் எல்லா கடமைகளையும் அந்தக் காரியத்தோடு சம்பந்தப்படுத்தி, நாம் தேவனிடத்திலிருந்து விரும்பிய அந்தக் காரியத்தை நோக்கி நம் இருதயம் தொடர்ந்து துடிக்கும்போது, மேலும் தகுந்த சூழ்நிலைகளிலெல்லாம் தேவனிடம் அந்த வேண்டுதலைக் கேட்கும்போது - இவை அனைத்திற்குப் பிறகு அவர் பதிலளிக்கிறார்" (R4983).

முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களாக, நம்முடைய ஜெபங்கள் பெரும்பாலும் நாம் பெற்ற ஆசீர்வாதங்களுக்கு நன்றியாகவும், தைரியம் மற்றும் நம்பிக்கையின் வெளிப்பாடாகவும், நம் வழிகளை தேவனிடத்தில் ஒப்படைப்பதாகவும், "**அனைத்தும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது**" என்ற மிகப் பெரிய வாக்குத்தத்தை நம்பிக்கையுடன் உணர்ந்துகொள்வதாகவும் இருக்க வேண்டும்.

**சோதனைகளில் உதவிச்செய்யும் விலையேறபெற்ற வாக்குத்தத்தங்கள்**

# வேதாகமத்தில் குதிரைகள்



Tom Gilbert

"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" (யோவான் 16:33).

கிறிஸ்தவர்கள் வளமான, எளிதான வாழ்க்கையை வாழ்வதற்கு தேவன் திட்டமிட்டிருப்பதாக சிலர் நம்புகிறார்கள். இது உண்மையாக இருந்தால் அவர் துயர்மிக்கத் தோல்வியை அடைந்திருக்க வேண்டும். உண்மையில் குமாரனுடைய, உபதேசங்களைப் பின்பற்றக் கூடியவர்கள், தங்களுடைய வாழ்க்கையின் கஷ்டமான அனுபவங்களைக் காட்டிலும் கூடுதலான இன்னல்களில் பங்கெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியில், "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" (யோவான் 16:33) என்று இயேசு தம்முடைய சீஷரிடம் கூறினார். அவர் உலகத்தை ஜெயித்தார் என்று சொல்லி, அவருடைய சீஷர்களுக்கு உற்சாகம் அளித்தார்.

அந்த இராத்திரியில் இந்த உலகத்தின் பாவங்களின் (உபத்திரவம்) முழு பாரமும் அவர் தோளின்மேல் அமர்ந்தது. மேலும் அவரோடு நல்லுறவு கொண்டவர்களும் அவரைப் புறக்கணிப்பார்கள் என்று அவருக்கு முன்னறிவிக்கப்பட்டது. அவருடைய தந்தை அவரோடிருந்தார் என்று அவர் அறிந்திருந்ததே அவர் பெற்றிருந்த ஆறுதலாயிருந்தது. "இதோ நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்" (யோவான் 16:32).

சரியாக இந்த இரண்டு வாக்கியங்களில் அவருடைய சீஷர்களாக இருக்கும் நமக்கு, நம்முடைய சோதனைகளில் இரண்டு மிகப்பெரிய ஆறுதலின் ஆதாரங்கள் கொடுக்கப்படுகிறது - இந்த உலகம் முன் வைத்திட்ட சவால்களை மேற்கொள்ளக்கூடிய நம்முடைய ஆண்டவரின் அறிவு மற்றும் நம்முடைய வாழ்க்கையில், ஆவிக் குரியவிதத்தில் நம்முடைய பரலோகப் பிதா நம்மோடிருக்கிறார் என்ற அறிவு.

**சோதனைகளின் நோக்கம்:**

இந்த அண்டசராசரத்தின் சர்வ வல்லமையுள்ள தேவன், அவருடைய பிள்ளைகள் சோதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவிப்பதற்கு அனுமதிப்பதின் காரணம் என்ன? இந்த அனுபவங்களை வெற்றிகரமாகச் சகிப்பதற்கு இந்தக் காரணத்தைப் புரிந்துக்கொள்வதே முதல் முக்கியமான படியாகும்.

தேவனுடைய முழு சிருஷ்டிப்புகளையும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் கீழ் இணைத்து தன்னோடு இசைவாக திரும்பிக்கொண்டுவருவதற்காக தேவன் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார் என்று வேதாகமம் கூறுகிறது. "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டும்" (எபேசியர் 1:10). இக்காலத்தில் தேவன் ஒரு வகுப்பான ஜனங்களை அழைத்து, சோதித்து தேர்வு செய்துகொண்டிருக்கிறார். "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபை" (எபிரெயர் 12:23).

மனித இனத்தின் இந்த அங்கத்தினர் இயேசு வாழ்ந்த வாழ்க்கையை வாழ்வதற்கும், அவர் இந்தப் பூமிக்கு எந்த நோக்கத்திற்காக வந்தாரோ, அதே நோக்கத்திற்காக தங்களை அர்ப்பணிப்பதற்காகவும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் - மனித இனத்தைப் பரிபூரணத்திற்குத் திருப்பி தங்களுடைய சிருஷ்டிகரோடு இசைந்திருக்கவே அவர் வந்தார். இப்படிப்பட்ட இந்தத் தனிப்பட்ட நபர்களின் வாழ்க்கையானது, வரக்கூடிய பகிரங்கமான ஆயிரவருட ஆட்சியில் கிறிஸ்துவோடு வேலைகளைச் செய்வதற்கு அவர்களை ஆயத்தப்படுத்துகிறது. இவர்கள் மனித இனத்தின் ஒவ்வொரு அங்கத்தினரையும் நித்திய ஜீவனைப் பெறுவதற்குப் பாத்திரவான்களாக மாற்றிக்கொள்வதற்கு அவர்களின் வாழ்க்கைகளை மறுரூபப்படுத்துவதற்கு உதவி செய்வார்கள்.

சோதனைகளையும், கஷ்டங்களையும் மேற்கொள்ளக்கூடிய ஜனங்கள் மற்றவர்கள் அதே விதமான சோதனைகளையும், கஷ்டங்களையும் மேற்கொள்வதற்கு உதவி செய்யும் சரியான கருவிகளாக இருப்பார்கள் என்று தேவன் அறிந்திருந்திருந்தார். இதன்விளைவாக, தேவன் இதன் முடிவை துவக்கத்திலிருந்தே

பார்த்துக்கொண்டிருப்பதினால், தனிப்பட்ட நபர்களை அழைத்து நம்முடைய உலகத்தில் பிரவாகித்துக்கொண்டிருக்கும் சுயநலமான சகல இயல்புகளையும் மனித சுபாவங்களையும், தீமையான தாக்கங்களையும் அதிகமாக மேற்கொள்வதற்கு அழைத்திருக்கிறார். இந்த அழைப்புக்கு நாம் செவிகொடுத்து ஏற்றுக்கொண்டால் இந்தப் பூமிக்குரிய வாழ்க்கை நம்மை பல உபத்திரவங்களின் வழியாக வழிநடத்தும். மேலும் எப்போதுமே விசுவாசமுள்ள ஒருவர்மேல் நம்முடைய நம்பிக்கையை வைக்க நமக்கு கற்றுக்கொடுக்கும்.

## உதவி மற்றும் உறுதிப்படுத்துவதற்கான வாக்குத்தத்தங்கள்

வேத வசனங்கள் நமக்கு ஆறுதலையும், வழிநடத்துதலையும், ஊக்கத்தையும் அளிக்கிறது. நாம் இந்த உலகத்தில் தனித்துவிடப்படுவதில்லை என்று இயேசு தம்முடைய சீஷர்களுக்கு வாக்களித்தார். அவருடைய பிதா அவருக்குப் பதிலாக ஒரு தேற்றரவாளனை - பரிசுத்த ஆவியை அனுப்புவார் என்று அவர் வாக்களித்தார். அவருடைய சமாதானத்தை நமக்குக் கொடுப்பார் என்று இயேசு கூறி, நாம் பயப்பட வேண்டாம் என்று நம்மை ஊக்குவித்திருக்கிறார்.

"என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவான் 14:26-27).

கடினமான அனுபவங்களினால் அதாவது இயேசுவின் சீஷர்களாக வாழக்கூடிய வாழ்க்கைக்கே போராட வேண்டிய அளவுக்கு உபத்திரவங்கள் வந்தாலும் நாம் ஆச்சரியப்பட வேண்டாம் என்று அப்போஸ்தலனாகிய பவுலின் வழியாக நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோத்தேயு 3:12).

நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் இக்கட்டான சூழ்நிலைகளின் காரணமாக, தேவன் நம்மை புறக்கணித்துவிட்டார் என்று நாம் என்றுமே சிந்திக்கக்கூடாது. நாம் வளரும்போது நம்முடைய பூமிக்குரிய பெற்றோர் நம்மை ஒழுக்கமாக வளர்ப்பதற்கு நம்மை நடத்தினதுபோல, தேவன் நமக்கு இப்படிப்பட்ட அனுபவங்களை அனுமதித்து, அதை மேற்கொள்ள உதவிசெய்வது அவர் நம்மை நேசித்து அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஏற்ற வளர்ச்சியடைவதற்கு வழிநடத்துகிறார் என்பதற்கான உண்மையான நிரூபனமாகும்.

"அன்றியும்: என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்து கொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே. அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்க வேண்டுமல்லவா? அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்" (எபிரெயர் 12:5-11).

சில நேரங்களில் நாம் நம்முடைய கடினமான சூழ்நிலைகளைக் காணும்போது, மற்றவர்களும் அதாவது தேவன்மேல் விசுவாசமில்லாதவர்களும் அதே பிரச்சனைகளில் இருப்பதைக் காண்கிறோம். இது நமக்குக் குழப்பமாக இருக்கலாம். தேவனுக்கு கனம் செலுத்தாதவர்கள் அனுபவிக்கும் உபத்திரவத்திலிருந்து தேவன் நம்மைப் பாதுகாக்க வேண்டும் என்று நாம் எண்ணலாம். ஆயினும் இந்த அனுபவங்களில் ஒரு பகுதியாக பாவத்தை மேற்கொள்ள உதவிச்செய்வதற்கு நாம் பயிற்சி பெற தேவனுடைய அனந்த ஞானத்தில் அதே சூழ்நிலைகளின் வழியாக தேவன் நம்மை அனுமதிக்கிறார், சோதனைகளை நீடியபொறுமையோடு சகிக்கவும், அதற்குரிய எந்தப் பாவத்திலும் நாம் விழாதபடிக்கு நம்மைத்

தப்புவிக்கவும், தேவன் அவருடைய ஆவிக்குரிய பிள்ளைகளாகிய நமக்கு வாக்களித்திருக்கிறார்.

"மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார்" (1 கொரிந்தியர் 10:13).

இந்த விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை நாம் பெற்றிருந்தும், மிகக் கடினமான சோதனைகளில், நாம் எவ்வளவுதான் தாங்கமுடியும் என்று தேவனுடைய நியாயத்தீர்ப்பைக்குறித்து கேள்வி எழுப்புவதற்கு நாம் உந்தப்படலாம். "நான் கையாள முடியாத எந்தக் காரியத்தையும், தேவன் எனக்குக் கொடுக்கமாட்டார் என்று நான் அறிவேன்." தேவன் அவருடைய ஆவிக்குரிய பிள்ளைகளின் விசுவாசத்தையும், தம்மேல் அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைச் சோதிப்பதற்கே, மிகக் கடுமையான சோதனைகளை அனுமதிப்பார் என்று தெளிவாகிறது, ஏனெனில், பொதுவாக மிகக் கடுமையான சோதனைகள் மிகுதியான ஆவிக்குரிய வளர்ச்சியைக்கொண்டுவரும்.

எவ்வளவு கஷ்டங்களானாலும் சரி ஆண்டவர் நமக்கு அனுமதிக்கும் அனுபவங்களில் நாம் களிகூர வேண்டும். நம்முடைய சோதனைகளில் நாம் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று யாக்கோபு நம்மை ஊக்குவிக்கிறார். ஏனெனில் நம்முடைய சோதனைகளில் ஜெயம் பெற்றால் ஓர் உறுதியான கிறிஸ்தவ குணத்தைப் பெறலாம். "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரணகிரியை செய்யக்கடவது" (யாக்கோபு 1:2-4).

பட்சிக்கிற அக்கினியைப்போல சோதனைகளை தேவன் உண்மையில் அனுமதித்தாலும், நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம், அதில் மகிழ்ந்து களிகூருங்கள் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுகிறார். "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்" (1 பேதுரு 4:12-13).

நம்முடைய சோதனைகளைப்பற்றி மற்றொரு ஊக்கம் அளிக்கக்கூடிய வாக்குத்தத்தம் ரோமர் 8:18-ஆம் வசனத்தில் காணப்படுகிறது. "ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்." இதே குறிப்பை அப்போஸ்தலனாகிய பவுல் 2 கொரிந்தியர் 4:17-ஆம் வசனத்தில் மீண்டும் வலியுறுத்துகிறார். "அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது."

இந்த மனுக்குலத்தின் உடல் ரீதியான, மனரீதியாக மற்றும் ஆவிக்குரிய காயங்களை சொஸ்தப்படுத்தி தங்களுடைய சிருஷ்டிகரோடு அவர்களை இசைவாக மீண்டும் ஒப்புரவாக்கும் வேலைகளில், கிறிஸ்துவோடு இணைந்துச் செயல்படக்கூடிய ஒப்பற்ற மகிழ்ச்சியைக் கற்பனை செய்து பாருங்கள்! புது உடன்படிக்கையின் ஒழுங்கின் கீழ் தேவனுடைய பிரமாணத்தை இந்த மனுக்குலத்தின் இருதயத்தில் எழுதுவதற்கு உதவிச் செய்வது, எவ்வளவு மகிழ்ச்சியான காரியமாக இருக்கும்! (எரேமியா 31:31-34).

### நாம் சோதனைகளில் தோல்வி அடைந்தாலும் பெறக்கூடிய உற்சாகம்

நம்முடைய சோதனைகளில் நாம் இடறும்போது, ஆண்டவராம் இயேசு நமக்காக எப்போதும் பிதாவின் சமுகத்தில் நமக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருப்பார் என்பதே நாம் பெற்றுள்ள விலையேறப் பெற்ற வாக்குத்தத்தமாகும். "தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக **வேண்டுதல் செய்கிறவரும்** அவரே" (ரோமர் 8:33-34). "மேலும், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக **வேண்டுதல் செய்யும்படிக்கு** அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (எபிரெயர் 7:25). "என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் **பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்**" (1 யோவான் 2:1-2).

சில நேரங்களில் நம்முடைய சோதனைகளில் இடறும்போது, ஆவிக்குரிய வாழ்க்கையில்

சோர்வடையலாம். நாம் தளர்ச்சியடைய வேண்டாம் என்று யோவான் நம்மை ஊக்குவிக்கிறார். நம்முடைய இருதயங்களில் நாம் நம்முடைய தோல்வியை உணர்ந்தாலும், தேவன் நம்மை ஓர் உயர்வான நோக்கத்தில் காண்கிறார் என்று அவர் நமக்குக் கூறுகிறார்.

"என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம். இதினாலே நாம் நம்மைச் சத்தியத்திற்குரியவர்களென்று அறிந்து, நம்முடைய இருதயத்தை அவருக்கு முன்பாக நிச்சயப்படுத்திக்கொள்ளலாம். நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார். பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டிருந்து, அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம். நாம் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமாயிருந்து, அவர் நமக்குக் கட்டளையிட்டபடி ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது" (1 யோவான் 3:18-23).

நாம் பரலோகப் பிதாவினிடம் கொண்டுள்ள ஐக்கியத்தில் தைரிமாகவும், நம்பிக்கையோடும் இருக்க வேண்டும் என்று வசனங்கள் நம்மை ஊக்குவிக்கிறது. "நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" (எபிரெயர் 4:15-16).

### வெற்றி

தேவனுடைய ஆவிக்குரிய பிள்ளைகளுக்கு அவருடைய தவறாத ஆதரவு மற்றும் பாதுகாப்புக் கென்று வேதத்தின் அநேக வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. "தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்ப தெப்படி? தேவன் தெரிந்து கொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்" (ரோமர் 8:31-33). "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. அதினாலே நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே" (எபிரெயர் 13:5, 6).

நம்முடைய வாழ்க்கையின் சோதனைகளில், நாம் வெற்றி பெற்றால், நம்முடைய பரலோக பிதா நமக்கு அழியாமையையும் (1 கொரிந்தியர் 15:53, 54), திவ்விய சுபாவத்தையும், ஜீவ கிரீடத்தையும் (2 பேதுரு 1:4) நம்முடைய மகிமைக்காக அல்ல, மாறாக அவருடைய மகிமைக்காகவே நமக்குப் பரிசளிப்பார் என்று வசனங்கள் வாக்களிக்கிறது. "கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்" (யாக்கோபு 1:12). வருங்கால யுகங்களின் வேலைக்கு கிறிஸ்துவின் ஆயிர வருட இராஜ்யத்தில் மற்றவர்களின் வாழ்க்கைகளை மாற்றுவதற்கு உதவி செய்யும் வல்லமையைத் தெய்வீக சுபாவம் நமக்களிக்கும். இந்த நம்பிக்கையைக் காட்டிலும் பெரும் மகிழ்ச்சி வேறெதில் நாம் பெற முடியும்? நம்முடைய வாழ்க்கையின் கஷ்டங்களைச் சகித்திருப்பதற்கு தேவனுக்கு மகிமை சேர்ப்பதையும், இந்த உலகத்தின் மனுக்குலத்தையும், சர்வ சிருஷ்டிகளையும் ஆசீர்வதிப்பதைக் காட்டிலும் வேறு பெரிய உந்து சக்தியிருக்க வாய்ப்பில்லை.

### சங்கீதம் 91

**1** உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான். **2** நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.

**3** அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் தப்புவிப்பார். **4** அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும். **5** இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும், **6** இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும்,

மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய். 7 உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது. 8 உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்குவரும் பலனைக் காண்பாய்.

9 எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக் கொண்டாய். 10 ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது. 11 உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார். 12 உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள். 13 சிங்கத்தின்மேலும் விரியன் பாம்பின்மேலும் நீ நடந்து, பால சிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய்.

14 "அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக் கிறபடியால்" அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன். 15 அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன். 16 நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.

குறைபாடுகள் மற்றும் பலவீனங்களைப்பற்றிய வாக்குத்தத்தங்கள்

# அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்.



"அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்" (2 கொரிந்தியர் 12:10).

"அபூரணத்திலும் ஒருவிதமான அழகு உண்டு" என்று திரைப்படங்களை எடுக்கும் கொன்ராடு ஹால் (Conrad Hall) ஒருமுறை கூறினார். ஆம் ஒரு திரைப்படம் இன்னும் கவர்ச்சியாக இருப்பதற்கு, என்ன செய்ய வேண்டும் என்று அவர் யோசித்துக்கொண்டிருந்தார். ஆனால் தேவனுடைய திட்டத்தில் பாவம் மற்றும் அபூரணமான அனுபவங்களின் வழியாகவே மனிதன் பூரணத்தையும், உண்மையான அழகையும் பெற்றுக்கொள்வான் என்று நாம் கற்றுக்கொள்கிறோம். நம்முடைய குறைபாடுகள் மற்றும் பலவீனங்களைக் குறித்த சில விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை நாம் ஆராய்ந்துப்பார்க்கும் போது, நாம் தேவனுடைய சாயலில் வளர்ச்சியடைய உதவியாக அவருடைய தனிப்பட்ட பரிபூரண அன்பையும், நம்முடைய குறைவுகளைக் கையாளும் அவருடைய ஞானத்தையும் நாம் காணத் துவங்குவோம்.

நாம் ஒவ்வொருவரும் குறைபாடுகளையும், பலவீனங்களையும் உடையவர்கள். நமக்காகப் பரிந்துப் பேசுகிற நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் வழியாக நம்முடைய எல்லா பாவங்களையும் மன்னிப்பதற்கு அவர் உண்மையுள்ளவராக இருக்கிறார். உண்மையில் நம்முடைய பலவீனங்களையும், பாவங்களையும் ஆசீர்வாதங்களாகவும், வளர்ச்சிக்குரிய வாய்ப்புகளாகவும் மாற்றுதே தேவனுடைய ஓர் அற்புதமான பகுதியாக உள்ளது.

**எல்லாரும் பாவஞ் செய்து**

"எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களானார்கள்" (ரோமர் 3:23). சிலர் மட்டுமே பாவஞ்செய்ததாகவும் அல்லது அநேகர் பாவம் செய்ததாகவும் இங்குச் சொல்லப்படவில்லை. மாறாக அனைவரும் பாவஞ்செய்தார்கள் என்று கூறுகிறது. ஏனெனில் நாம் பாவத்தில் கர்ப்பந்தரித்து, துர்க்குணத்தில் உருவானோம் (சங்கீதம் 51:5). இந்த முக்கியமான காரியத்தை நாம் மனதில் வைத்திருக்க வேண்டும். ஏனெனில் சில சகோதரர்கள், தங்களுடைய பாவங்களையும், குறைகளையும் அதிகமாக மையப்படுத்திக்கொண்டிருப்பார்கள். இது சோர்வுக்குள்ளாக வழி நடத்தும்.

நாம் முதன்முதலில் உடன்படிக்கைச் செய்தபோது, நம்முடைய அநேக அபூரணமானவைகளை நம்முடைய கண்களுக்கு தேவன் மறைத்துவிடுகிறார். ஏனெனில் அனைத்தையும் அவர் வெளிப்படுத்தினால், நாம் திணறிவிடுவோம் என்று அவர் அறிந்திருக்கிறார். நாம் தொடர்ந்து இடுக்கமான பாதையில் செல்லும்போது, நமக்குள் மறைந்திருக்கும் தவறுகளை தேவன் படிப்படியாக வெளிப்படுத்தத் துவங்குவார். அவர் அப்படிச் செய்யும்போது, நாம் தவறான ஆவிக்குரிய திசையில் செல்லுவதாக நாம் நம்ப துவங்குவோம். ஆயினும் பாவத்தை நாம் அதிகமாக உணருவதினால், இந்தக் குறைபாடுகள் நம்முடைய முன்னேற்றத்திற்கான குறிப்புகள் என்ற உண்மையை நாம் காணலாம். "ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியில் இல்லை" என்று பிரசங்கி 7:20-இல் கூறுகிறார்.

**நாம் நம்மையோ, மற்றவர்களையோ நியாயந் தீர்க்க முடியாது**

"மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்; அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள்; மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாகும்படி தீர்க்காதிருங்கள், அப்பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள்" (லூக்கா 6:37). நாம் நியாயந்தீர்க்கப்படாமல் இருப்பதற்கு, மற்றவர்களை நாம் நியாயந்தீர்ப்பதற்கு நாம் அனுமதிக்கப்படுகிறதில்லை. உண்மையில் நம்முடைய சகோதரர்களின் தவறுகளைக் காணும்போது, அவர்களுக்காக நாம் இரக்கப்பட்டு, அந்தத் தவறுகளை மேற்கொள்ள உதவிச்செய்ய வேண்டும். இந்த உதவி பல உருவங்களில் வரலாம். எளிமையாக உற்சாகம் அளிக்கலாம், உதவிக்கரங்களை நீட்டலாம் அல்லது மத்தேயு 18-ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள முறைகளை நடைமுறைப் படுத்தலாம்.

உண்மையில், "நானும் என்னைக்குறித்துத் தீர்ப்புச்சொல்லுகிறதில்லை" (1 கொரிந்தியர் 4:3) என்று பவுல் கூறுகிறார். இதற்கு நம்மை நாமே மதிப்பிட்டு, தேவைப்படும் இடங்களில் முன்னேற்றமடைய முயற்சி செய்யக்கூடாது என்று நாம் புரிந்து கொள்ளக்கூடாது. "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்" (1 கொரிந்தியர் 11:31). மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால், நம்மை நாம் ஆராய்ந்து, நம்மை திருத்திக்கொண்டால், தேவன் நம்மைக் கண்டிப்பதற்கோ, திருத்துவதற்கான முயற்சிகளை எடுப்பதற்கோ அவசியம் இருக்காது.

ஆயினும் நம்முடைய தவறுகளின்மேல், அதிகமாகக் கவனஞ்செலுத்துவது கடுமையான சோர்வுக்குள் நம்மை வழிநடத்தும். ஏனெனில் நம்மை பிசாசானவன் முழுமையாக மேற்கொள்ளும் அபாயத்தில் அகப்பட்டுவிடுவோம். நம்முடைய நடக்கையினால் சோர்வடையும்போது, தேவனுடைய அன்புக்கு நாம் அபாத்திரராக இருப்பதாக எண்ணலாம். உண்மையில் இது நம்முடைய சொந்தச் செயலாக இருந்தாலும், தன் உணர்வற்றவர்களாக அவருடைய வெறுப்பைப் பெருமளவுக்கு ஆண்டவரிடமிருந்தும் நாம் விலகிவிடலாம். நாம் பாவஞ்செய்யும்போது, முதலில் தேவனிடம் மன்னிப்பைக் கேட்பதற்கு ஓட வேண்டும். தேவனுடைய தவறாத அன்பையும், இரக்கத்தையும் நாம் தேடிவருவோம் என்று தேவன் நமக்காகப் பொறுமையாகக் காத்திருக்கிறார். "அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்" (உபாகமம் 33:27).

### தேவன் நம்மை மன்னிக்க உண்மையும் நீதியும் உள்ளவர்

நம்முடைய பாவத்தை உணர்ந்து, அவருடைய மன்னிப்பை வேண்டி ஓடும்போது, அவர் நம்மைச் சகல அநீதியிலிருந்தும் சுத்திகரித்து மன்னிப்பதாக வாக்களித்திருக்கிறார் (1 யோவான் 1:9 ). இந்த அருமையான வாக்குத்தத்தத்தை நாம் இறுக பற்றிக்கொண்டு சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும். இந்த மன்னிப்புக்கு ஒரு வழி சொல்லப்படுகிறது. அதில் தேவன் அவருடைய பங்கை எப்போதும் நிறைவேற்றுவார். நம்முடைய பொறுப்பு என்னவெனில், "ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" (எபிரெயர் 4:16). தம்முடைய ஜனங்கள் தங்களுடைய தொடர்ச்சியான தோல்விகளை எண்ணி அவமானப்படுவார்கள் என்பதை தேவன் அறிந்திருப்பதினால், ஊக்கமளிக்கக்கூடிய இந்த விசேஷித்த செய்தியை அவர் அளித்தார். அவருடைய கிருபையினால் தொடர்ச்சியான தோல்விகளானாலும் சரி இந்த மன்னிப்பும், உதவிகளும் எப்போதும் நமக்குக் கிடைக்கக்கூடியதாக உள்ளது. இதை நாம் எப்போதும் நினைவில்கொள்ள வேண்டும்.

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக் கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்தேயு 11:28) என்று இயேசு கூறினார். நம்முடைய விழுந்துபோன மாம்சம் மற்றும் சாத்தானுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கிறோம். பாவ சுமைகளினால் நாம் அழுத்தப்படுகிறோம். அர்ப்பணிக்கும் போது, நம்முடைய ஜீவியங்களை அவருக்குக் கொடுத்து, நாம் பாவஞ்செய்யும்போது, அவரிடம் வரும்போது அதற்குப்பதிலாக நமக்கு இளைபாறுதல் அளிக்கும்படியாக அவர் அந்த பாவத்தின் சுமையைச் சுமந்து அவருடைய நிலையான அன்பை உறுதிப்படுத்துகிறார்.

"தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்" (சங்கீதம் 103:13, 14). இந்த வசனத்தில், "இரக்கம்" என்ற வார்த்தைக்கு, "அன்பு செய்தல்" என்று பொருள். ஒரு தந்தை தம்முடைய சொந்த பிள்ளைகளுக்கு இரங்குவதுபோல, அவரை நேசித்து, அவரிடம் பயபக்தியாக இருப்பவர்கள்மேல் தேவன் இரக்கமுள்ளவராக இருக்கிறார். நாம் விழுந்துபோன அபூரணமான அமைப்பைக் கொண்டுள்ளவர்கள் என்று தேவன் அறிந்திருப்ப தினால் அவர் நம்மேல் இரக்கமுள்ளவராக இருக்கிறார்.

"என் பிள்ளைகளே, நீங்கள் பாவ செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" (1 யோவான் 2:1). நமக்குப் பரிந்து பேசுகிறவராக இயேசு நம் அருகில் நின்று, நம் சார்பில் வாதாடுகிறார். நாம் குற்ற உணர்வுள்ளவர்களாக இருந்தாலும் அவர் நம்மைப் பாதுகாத்து, நீதியுள்ள நியாயாதிபதியாகிய பிதாவிடம் நமக்காக மன்றாடுகிறார்.

நாம் பாவஞ்செய்யும்போது, அவருடைய ஈடுபலியின் நன்மையைப் பயன்படுத்தி, நம்மைச் சுத்திகரித்து, இக்காரியத்தைச் செய்கிறார். நாம் செய்த பாவம் கொடூரமானதாக இருந்தாலும், இயேசுவின் வல்லமை அதைக்காட்டிலும் மிக அதிகமானது என்பதில் நாம் முழுமையான நம்பிக்கைக் கொண்டிருக்க வேண்டும். இப்படியாக நாம் இயேசுவின் வழியாக தேவனிடம் வரும்போது, நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதென்று உறுதியோடு இளைப்பாறலாம். நமக்குத் தேவைப்படும் ஒவ்வொரு சமயத்திலும் உதவும்படி வாக்களிக்கப்பட்ட கிருபைகளைத் தேடுவதும், நீதியை அடிப்படையாகக் கொண்ட நம்முடைய சிறந்த முயற்சிகள் கிறிஸ்துவின் வழியாகவும், நாம் பெற்ற விசுவாசத்தோடும் ஏறெடுக்கும்போது, அது தேவனால் அங்கிகரிக்கப்படும் என்று நம்புவதும் நம்முடைய சிறப்புரிமையாக இருக்கிறது.

**தேவனால் நம்முடைய பலவீனங்களை ஆசீர்வாதங்களாக மாற்ற முடியும்**

"அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என் மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்" (2கொரிந்தியர் 12:9-10).

இந்த வேதபகுதி ஒவ்வொரு வெற்றிகரமான கிறிஸ்துவ வாழ்க்கையின் இரகசியம் என்று சகோ. ரஸல் விவரித்தார் (R5942:4). நம்முடைய பலவீனங்களைத் தனித்துப் போராட முடியாது என்று நாம் உணர்ந்து கிருபாசனத்தண்டைக்கு வரும்போது, நாம் ஆண்டவரின் வல்லமையால் பலப்படுத்தப் படுவோம். சுயமாக இந்த வல்லமையை நாம் என்றுமே பெறமுடியாது (எபேசியர் 6:10). தேவனுடைய உதவிகளையும், வழிநடத்துதலையும் மற்றும் தைரியத்தையுமே சார்ந்திருக்கும்போது, நாம் மேலும் பலப்படுகிறோம். இதினிமித்தமாக நம்முடைய பலவீனங்களில் நாம் களிகூரலாம். ஏனெனில் நாம் உதவிகளைப் பெறும்படிக்கு இது நம்மை தேவனிடம் ஓடச்செய்கிறது. இதற்குப்பதிலாக நாம் தேவனைப் பிரியப்படுத்தும் முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டு, நம்முடைய அபூரணத்திற்கு எதிராக இன்னும் கடும்முயற்சி ஏறெடுப்போம். உண்மையில் இது எப்படிப்பட்ட ஆசீர்வாதம்! நாம் உடைந்த மண்பாண்டங்கள். நாம் சொந்த முயற்சிகளைக்கொண்டு காரியங்களைச் சாதிப்பதைக்காட்டிலும், தேவனுடைய பலம் நமக்குள் வேலை செய்யும்போது, அவர் அதிகமாகக் கனப்படுத்தப்படுகிறார் (R1920).

இதற்கான ஓர் எடுத்துக்காட்டு, அப்போஸ்தலனாகிய பவுலின் அனுபவத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அவருடைய "மாம்சத்தில் ஒரு முள்" கொடுக்கப்பட்டிருந்தது, அவருடைய பார்வையற்ற நிலையாக இருக்கக்கூடும் (2 கொரிந்தியர் 12:7). இந்த ஒரு பாரத்தை தேவன் நீக்கமாட்டார் என்பதை பவுல் தெளிவாக அறிந்தபோது, அவர் அதை நன்மைக்கு ஏதுவாக ஏற்றுக்கொண்டார். அவர் ஆவிக்குரிய பார்வையற்ற நிலையிலிருந்து, வாழ்க்கையின் நினைப்பூட்டுதலாக இருந்து மேலும் அது அவருடைய தகுதியற்ற நிலையை நினைப்பூட்டியது. இன்னும் கடுமையாக உழைப்பதற்கும், அதிகமாக அர்ப்பணிப்பதற்கும் இந்த முள்ளை ஓர் ஊக்குவிக்கும் கருவியாக பவுல் பயன்படுத்தினார். அவருடைய குறைவான பார்வை மற்றும் அதோடு அவர் பட்ட மற்ற உடல் ரீதியான உபத்திரவங்களிலும் எவ்வளவாய் தேவனுடைய வழிநடத்துதலும், உதவியும் தேவை என்பதை அவர் உணர்ந்தார்.

நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதென்று நாம் புரிந்து கொண்டோம் என்ற காரியமானது, ஆண்டவரின் பலத்தையும் கிருபையையும் அதிகபட்சமான அனுகூலமாக எடுத்துக்கொண்டு, அறிந்தே பாவம் செய்யலாம் என்று பொருளல்ல (ரோமர் 6:15)! நம்முடைய பலவீனங்கள் மற்றும் அபூரணங்களுக்கு எதிராக தொடர்ந்து கடும் முயற்சியோடு போராட வேண்டும். நாம் அந்தப் பரிபூரணத்தை அடைய முடியாது என்று முழு அறிவோடு போராட வேண்டும் என்று ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்ப்பது மிக ஆர்வமூட்டுகிறதாயிருக்கிறது. ஆனாலும் நாம் எடுக்கும் முயற்சிகளில் எந்தளவிற்கு நாம் மனப்பூர்வமாகச் செயல்படுகிறோம் என்பதை தேவன் கவனித்துக்கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட முயற்சிகளோடு வளர்ச்சிகள் துவங்கும். அங்கு நமக்குரிய திறவுக்கோல் கிடைக்கும். நம்முடைய ஒவ்வொரு சொட்டு பலத்தோடும் நம்முடைய அபூரணத்திற்கு எதிராகப் போராடுவோம். நாம் அறிந்திருக்கக்கூடிய நம்முடைய சகலவிதமான குறைபாடுகளும், நமக்கு ஓர் இரட்சகர் தேவை என்பதற்கான நினைப்பூட்டுதலாக இருக்கக்கடவது. ஆண்டவர் சம்பந்தப்பட்ட செயல்களுக்கு அதிகமான நேரத்தையும், பலத்தையும் செலவழிக்க, இது நம்மை உய்விக்கக்கூடியதாக இருக்கக்கடவது.

இப்படியாக நம்முடைய சோதனைகளும், உபத்திரவங்களும் நம்முடைய "நித்தியமான கனமகிமைக்கென்று" நம்மை நடத்தும் அல்லது நமக்குள் கிரியை செய்யும் (2 கொரிந்தியர் 4:17).

"அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை; கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்" (சங்கீதம் 37:24). நீதியுள்ள தனி நபர்கள்கூட இடறி தவறு செய்வார்கள். ஆனால் மீண்டும் எழும்புவதே ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கையின் ஒரு முக்கியமான பகுதியாக இருக்கிறது (நீதிமொழிகள் 24:16). அவருடைய கிருபையினாலே, நாம் எழும்புவதற்கு ஆண்டவர் உதவி செய்வார்.

ஆகவே நாம் நம்முடைய பலவீனங்களைக் கண்டு பயப்பட வேண்டாம். ஏனெனில் இதன் அடிப்படையில் தேவனுடைய வல்லமையும், மகிமையும் அற்புதமாக வெளிப்படுத்தப்படுகிறது. சில நேரங்களில் தவறுகள் செய்துவிடுவோம் என்ற பயம் செயல் இழக்கச்செய்து நம்மை உறைய வைக்கும். தவறுகள் செய்துவிடுவோம் என்ற பயத்தினால் செயல்படாமல் இருக்க வேண்டாம். நம்முடைய சொந்த சித்தம் செய்யாமல் தேவனுடைய சித்தம் செய்வதற்கு நாம் முயற்சிக்கும் வரையில் தேவனுடைய, மேற்கொள்ளக்கூடிய வல்லமையின மேல் அதிகமான நம்பிக்கை வைக்க வேண்டும்.

நம்முடைய பலவீனங்களிலிருந்தும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அவைகளைப் புரிந்துகொள்வதினால் நாம் அவைகளை எவ்வாறாக கையாளுவதற்கு தேவன் நம்மை நடத்துவார் என்று நம்முடைய வருங்கால அனுபவங்களுக்கு நாம் இன்றும் சிறப்பாக ஆயத்தப்படலாம். நாம் படிப்படியாக தேவனையும், அவர் நீதியையும் தேட கற்றுக்கொள்ளும்போது, இது தீமையை அனுமதிப்பதற்கான ஓர் இயல்பான பகுதியாக இருக்கும்.

**பலவீனங்களோடு கிரியை செய்வதற்கான கிறிஸ்து ஓர் எடுத்துக்காட்டு**

அப்போஸ்தலனாகிய பேதுருவின் வாழ்க்கையிலுள்ள இந்தக் கோட்பாடுகளில் சிலவற்றை நாம் காணலாம். கட்டுக்கடங்காத வைராக்கியத்திற்கு பேதுரு பேர்பெற்றவர். ஆயினும் அவருடைய குறைவான விசுவாசத்திற்காகவும், ஆண்டவரை மறுதலித்ததற்காகவும் அவர் குறை கூறப்பட்டார். புயல் வீசும் கடலில் மிதந்த கப்பலில் (மத்தேயு 14:22-29; மாற்கு 6:45-51; யோவான் 6:16-24) உண்மையில் சீஷனாகிய பேதுரு மட்டுமே கப்பலைவிட்டு இறங்கி இயேசுவை நோக்கி கடலில் நடந்துவந்தவர். இதற்கு அதிகபட்சமான தைரியமும், விசுவாசமும் தேவைப்பட்டது. ஆனால் இறுதியில் பேதுரு அபூரணராக இருந்தபடியால் அலைகளினாலும், அடித்த காற்றினாலும் வெகு சீக்கிரத்தில் அவர் பயந்தார். அவர் கடலில் முழுகத்துவங்கினபோது, இயேசு தம்முடைய கையை நீட்டி அவரை படகிற்குக்கொண்டு வந்தார். "அற்பவிசுவாசியே, ஏன் பயப்பட்டாய்" (மத்தேயு 14:30, 31) என்று சொல்லி இயேசு பேதுருவை கடிந்துகொண்டார். இந்த அனுபவமானது பேதுரு மட்டுமல்ல, நாம் அனைவரும் விசுவாசம் மற்றும் பயம் என்ற கலவையாக இருக்கிறோம் என்ற உண்மையை வெளிப்படுத்துகிறது. விசுவாசம் மனுஜ பயத்தை மேற்கொள்ள வேண்டும் என்று காண்பிப்பதற்கு ஆண்டவர் இந்த அனுபவத்தைப் பயன்படுத்தினார். மீதியுள்ள சீஷர்களுக்கு அவருடைய வல்லமைக்கு இது ஓர் அற்புதமான சாட்சியாக இருந்தது. ஆகவே, "மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன்" (மத்தேயு 14:33) என்று அவர்கள் கூறினார்கள்.

இந்த அனுபவத்திற்குப் பின் பேதுரு ஆண்டவரை மறுதலித்தார் (மத்தேயு 26: 69-75). இயேசுவை அழைத்துச் செல்லக்கூடிய அந்த முற்றத்தில் பேதுரு அமர்ந்திருந்தார். அவர் இயேசுவை பின் பற்றக்கூடிய தைரியத்தைப் பெற்றிருந்ததினால் பேதுரு அங்கு அமர்ந்திருந்தார். ஆனால் சற்று நேரத்திற்கு முன் கெத்செமனே தோட்டத்தில், தன்னுடைய ஜீவனைக் கொடுத்து இயேசுவை பாதுகாக்க ஆயத்தமாக இருந்தார். ஆனால் பிரதான ஆசாரியனின் முற்றத்தில் அவர் தனியாக இருந்ததினால் பயந்தார். அவர் இயேசுவின் சீஷர் என்று குற்றஞ்சாட்டப்பட்டபோது, அவர் ஆண்டவரை அறிந்திருந்தும் பயத்தினால் அவரை மறுதலித்தார். பேதுரு இருக்கும் இடத்தில் நீங்கள் இருப்பதை சற்று கற்பனை செய்து பாருங்கள். முதல் நாள் இரவு இரட்சகராகிய அந்த மனுஜனுக்காக உங்கள் ஜீவனையே கொடுப்பதற்கு துணிந்திருந்தாலும் இப்போது அவரை மறுதலித்ததை நீங்கள் உணரும்போது உங்களுக்கு எப்படிப்பட்ட குற்ற உணர்வு இருந்திருக்கும்? தாங்கொண்ணா குற்ற உணர்வை பேதுரு பெற்றிருக்க வேண்டும். இருதயம் நொறுக்கப்பட்டவராக வெளியே சென்று மனங்கசந்து அழுதார்.

இயேசு உயிர்த்தெழுந்த பின் அவர் பேதுருவோடு சம்பாஷித்தவிதம் மிகுந்த ஞானத்தையும் அக்கறையையும் வெளிப்படுத்தியது (யோவான் 21:15-25). சமாளிக்க முடியாத அளவுக்கு குற்ற உணர்வினால் பேதுரு அவதிப்பட்டிருப்பதை இயேசு நன்கு அறிந்திருந்தபடியால், அவர் பேதுருவை நோக்கி, "நீ என்னை நேசிக்கிறாயா (அகாபே)" என்று கேட்டபோது, "ஆம்" என்று நல்ல மனசாட்சியுடன் பேதுருவினால் பதில் அளிக்க முடியவில்லை. அகாபே

அன்பை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தபோதிலும் பேதுரு அந்த அன்பை வெளிப் படுத்தாததினால் அவரால் இயேசு கேட்ட கேள்விக்குப் பதிலளிக்க முடியவில்லை. இருப்பினும், பேதுருவின் குற்ற உணர்வுகளை அவர் மிஞ்சி செயல்பட வேண்டியது அவசியம் என்று இயேசு அறிந்திருந்தார். பேதுரு எவ்வாறு மரிக்கப்போகிறார் என்று இயேசு பேதுருவிடம் கூறினார். அவர் ஆண்டவராம் தேவனுடைய நாமத்தினிமித்தம் சிலுவையில் அறையப்படுவார் என்று கூறினார். ஆச்சரியமூட்டும் வகையில், இதை பேதுரு முன் அறிந்துகொண்டபோது, அவருக்கு மெய்சிலிர்த்தது. இயேசுவுக்காக உண்மையான பலியின் அன்பை வெளிப்படுத்துவதற்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுக்கப்படுவதை இது பொருள்படுத்தியது. இப்படியாக, பேதுருவின் இருதயத்தை இயேசு வாசித்து, இப்படிப்பட்ட ஞானத்தினால், அவருடைய விசுவாசத்தையும், தைரியத்தையும் திரும்ப கொடுத்தார். இப்போது பேதுரு தொடர்ந்து முன்னேறி சபையின் உண்மையான தலைவரானார்.

இந்த அனுபவம் பேதுருவுக்கு புதிய பலத்தையும், ஞானத்தையும் கொடுத்தது. நாம் 1 பேதுரு 5:6-9-ஆம் வசனங்களை வாசிக்கும்போது, அவருடைய வார்த்தைகளில் அற்புதமான வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் காண்கிறோம். "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக் கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்பேற்பட்ட பாடுகள் நிறைவேறி வருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே."

**முடிவுரை**

இந்த இடுக்கமான பாதையில் நாம் எங்கிருந்தாலும் சரி, பாவம் இன்னும் நம்மோடுதான் இருக்கிறது. ஆகவே நமக்கு ஒரு இரட்சகர் அவசியம் தேவை. நம்முடைய சொந்த குறைபாடு களையும், பலவீனங்களையும் மிகக் கவனமாக மதிப்பிட்டு, பின் அதற்காக மன்னிப்பைப் பெற்று அவைகளை மேற்கொள்வதற்கு கிருபாசனத்தண்டைக்கு தைரியமாக வர வேண்டும். அப்போது பரலோக பிதாவிடம் நமக்காக பரிந்துபேசுகிறவர் இருப்பதினால் தைரியமாக மன்னிப்பை நம்பிக்கையோடு பெறலாம். அவைகளினால் நாம் நம்முடைய கடந்த காலத்திலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு அப்போஸ்தலனாகிய பேதுருவின் வாழ்க்கையில் அற்புதமாக நிகழ்த்திக் காட்டப் பட்டதுபோல, நாம் நம்முடைய பரலோக இலக்கை நோக்கி முன்னேறிச் செல்லலாம். எழுச்சியூட்டும் சகோதரர் வின்சன்ட் சர்ச்சில் அவருடைய வார்த்தைகளைக்கொண்டு இந்தப் பகுதியை நிறைவு செய்யலாம். "எப்போதும், என்றுமே விட்டுக்கொடுக்க வேண்டாம்."

திரைக்கு அப்பால் உள்ள சந்தோஷத்தைப்பற்றிய வாக்குத்தத்தங்கள்

# கண்கள் கண்டதும் இல்லை



Tom Ruggirello

"எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்" (1 கொரிந்தியர் 2:9, 10).

தேவன் கொடுத்திட்ட அநேக வாக்குத்தத்தங்களை நாம் படிக்கும்போது, இந்தச் சுவிசேஷ யுகத்தில் அர்ப்பணித்தவர்களுக்கான வருங்கால எதிர்பார்ப்புகள் சம்பந்தப்பட்ட வியக்கத்தக்க வார்த்தைகளைக் காணலாம். இந்த வாழ்க்கையில் கிறிஸ்துவின் சாயலுக்குத் தங்களை உறுதி செய்வதற்கு, மனப்பூர்வமாக விரும்பக்கூடியவர்களுக்கு மெய்சிலிர்க்க வைக்கும் இந்த வாக்குத்தத்தங்கள் தேவன் கொடுக்கக்கூடிய புதிதும் அற்புதமான சிறப்புரிமைகளை விவரிக்கிறது. மேற்கூறப்பட்டுள்ள காரியங்கள் அனைத்தும் மாம்சமான மனுஷனுக்கு வெளிப்படுத்தப்படாமல் தேவனை நேசித்து சத்தியத்தின் முத்துக்களைத் தேட விரும்புபவர்களுக்கு, தேவனுடைய ஆவியின் உதவியைக்கொண்டும் நமக்கு முன்னிருப்பவைகளின் பொருளின் ஆழத்தைப் புரிந்துகொள்வது மிகக் கடினமாக உள்ளது.

### மணவாட்டியைத் தேர்வு செய்தல்

"குமாரத்தியே கேள், நீ உன் செவியைச் சாய்த்துச் சிந்தித்துக்கொள், உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு. அப்பொழுது ராஜா உன் அழகில் பிரியப்படுவார்; அவர் உன் ஆண்டவர், ஆகையால் அவரைப் பணிந்துகொள்" (சங்கீதம் 45:10, 11).

பிதாவாகிய தேவன் நம்முடைய ஆண்டவருக்காக ஏனோதானோவென்று மணவாட்டியைத் தேர்வு செய்வதில்லை. தம்முடைய குமாரனோடு ஒத்திசைவாக இருக்க வேண்டிய சில குறிப்பிட்ட பண்புகளை தேவன் எதிர்பார்க்கிறார். இயேசுவின் தூய்மை மற்றும் நற்குணத்திற்கு ஒத்திருக்கும் பண்புகளே இந்தச் சுவிசேஷ யுக அழைப்பின் மையமாக இருக்கிறது. வருங்கால மணவாட்டி தன்னுடைய செவியைச் சாய்த்து, அழைப்பை கவனிக்கிறாள். இவர்கள் புது சிருஷ்டிகளாக வளர்ச்சியடைவார்கள் என்பதை அறிந்திருக்கிறபடியே தேர்வு செய்யப்பட்டவர்களின் இருதயங்கள் மற்றும் சிந்தைகளில் ஒருவிதமான அழகு இருப்பதை சங்கீதக்காரர் வெளிப்படுத்துகிறார்.

வசனப்பகுதியில் விவரிக்கப்பட்டபடி இவர்களே கிறிஸ்துவின் மணவாட்டியாக இருப்பதன் அர்த்தமுள்ள மேன்மையான ஐக்கியத்திற்காக பூமிக்குரிய கட்டுகளை விட்டுவிடுவதற்கு மனப்பூர்வமாக துணிந்தவர்கள். ஒரு மணவாளனும் மணவாட்டியும் ஒரே சிந்தையுடையவர்களாக இருந்தால் இவர்கள் ஒருமித்து வேலை செய்யும்போதும் நல்ல பொருத்தமுள்ளவர்களாக ஒரு உறுதியானதும், நீடித்திருப்பதும் மற்றும் ஆழமான பந்தத்தை ஏற்படுத்தக்கூடியவர்களாக இருப்பார்கள்.

### மகிழ்ச்சியின் நிறைவு

"ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு" (சங்கீதம் 16:11).

மிகச் சிறந்த வளர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களுங்கூட நிறைவான மகிழ்ச்சி என்பதற்கான பொருளை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. ஜீவனுக்குரிய பாதையை காண்பிப்பதற்கு தேவன் நமக்கு வாக்களித்திருப்பதினால், அவருக்கு மகிழ்ச்சி தரக்கூடிய காரியங்களுக்கு அருகில் நம்மை வழிநடத்துவார் என்று நாம் எதிர்பார்ப்பது நியாயமானது. இங்கு ஆசரிப்புக்கூடாரத்தின் நிழல் நம் சிந்தைக்கு வருகிறது. இவ்வுலகை அடையாளப்படுத்தும் ஆசரிப்புக்கூடாரத்திற்கு வெளியே பாளயத்தில் வசிப்பவர்களுக்கு தேவனுடைய நிறைவான மகிழ்ச்சியைப் பெறமுடியாது. இந்த ஆழமான ஆவிக்குரிய குணங்களை வளர்ச்சியடைவதற்கு இந்த உலகத்தின் வரையளவு ஆற்றலுடையதல்ல. ஒருவர் பிரகாரத்தின் நிலைக்குள் பிரவேசித்து செலுத்தப்பட்ட பலிகளைக் காணும்போது அந்தப் பலிகளைப்பற்றி ஏதோ ஓரளவுக்குப் புரிந்துகொள்ள முடியும். ஒப்புரவாகுதலின் வேலை தெளிவாகப் புரிந்துகொள்ளப்படும்போது இக்காரியம் அதற்கேற்ற மகிழ்ச்சியைக் கொடுக்கும். முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட நிலையாக பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்லும்போது, ஒரு கிறிஸ்தவர்

வெளிச்சத்தையும், தேவனோடு பெற்றுக்கொள்ளும் விசேஷித்த ஐக்கியத்தின் போஜாக்கையும் அனுபவிப்பார்கள். இது புது சிருஷ்டிக்கு அறிவையும், வளர்ச்சியையும் கொண்டுவரும். இந்த நன்மைகள் விளக்கு மற்றும் சமுகத்து அப்பங்களிலும் அடையாளப்படுத்தப்படுகிறது. ஒரு உண்மையான மகிழ்ச்சியின் உணர்வு, இருதயத்தை நிரப்பத் துவங்கி, உண்மையான தொழுகையின் தூபம் தேவனிடம் ஏறெடுக்கப்படும். தொடர்ச்சியான வளர்ச்சியோடு தேவனுடைய கோட்பாடுகள் அர்த்தமுள்ளதாக, ஆழமாக வேர் கொள்ளும். தேவனுடைய இந்தக் கோட்பாடுகளே தேவனுடைய மகிழ்ச்சியின் அஸ்திபாரத்தை உருவாக்குகிறது.

இரண்டாம் திரையை நோக்கி கிறிஸ்தவர்கள் செல்லும்போது, அவர்கள் தேவனுடைய பிரசன்னத்தை நெருங்கக்கூடியவர்களாக இருப்பார்கள். மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும் போது, அவருடைய உண்மையான பிரசன்னத்தில் இருப்பார்கள். அங்கு மகிழ்ச்சியின் முழு நிறைவைப் பெறமுடியும். தேவனைப்பற்றியும், அவர் நிலைத்து நிற்கக்கூடிய கோட்பாடுகளை நாம் அறிந்துகொள்ளும்போதும், இந்த வாழ்க்கையில் மகிழ்ச்சி துவங்குவதை இந்த அருமையான சித்திரம் காட்டுகிறது.

இந்த வசனப்பகுதி - "உமது வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு" என்றும் கூறுகிறது. "பேரின்பம்" என்பதற்கான எபிரெய வார்த்தை பெருமகிழ்ச்சி என்றும் மொழிபெயர்க்கப் படலாம். "தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர் கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்" (சங்கீதம் 147:11). "கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மேல் பிரியம் வைக்கிறார்" (சங்கீதம் 149:4). "தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம்" (எசேக்கியேல் 18:23). "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு இராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" (லூக்கா 12:32). "பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக " (எபேசியர் 1:5). மேற்கூறியவைகள் மற்றும் நல்ல உயர்ந்த கோட்பாடுகளில் வாழ்வதின் பெருமகிழ்ச்சி மற்றும் அந்தக் கோட்பாடுகளின் வழியாகப் பிறரை ஆசீர்வதிப்பதிலுள்ள மகிழ்ச்சி இவையனைத்தையும் தேவன் தம் ஜனங்களுடன் பகிர்ந்துகொள்ளும் சில இன்பங்கள் ஆகும்.

உண்மையில் தேவனுடைய பிரசன்னத்தில் வருவது என்னவாக இருக்கும்? அல்லது எப்படியிருக்கும்? இப்போது நமக்கு இதைப்பற்றி தெரியாது. ஆனால் ஒருவர் தன்னுடைய தந்தையின் அறைக்குள் நுழையும்போது, அன்பான வரவேற்பை உணரலாம். உண்மையாக தேவனுடைய பிரசன்னத்திற்குள் நாம் இதுவரையில் பிரவேசியாதப்போதிலும் அந்த நுழைவாயில் நம்மை விரும்பி ஏற்றுக்கொண்டு நமக்காக உரிய இடத்தை ஆயத்தம் செய்து வைத்திருக்கும் வீட்டிற்கு வந்துவிட்டது போலிருக்கும்.

**ஒரு புதிய நாமம்**

"ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை; என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன்" (வெளிப்படுத்தல் 3:12).

இந்த விலையேறப்பெற்ற வாக்குத்தத்தம் ஏதோ நம்மை திணர வைக்கிறது. ஆண்டவருக்காக வாழப்பட்ட ஒரு முழுமையான வாழ்க்கைக்கு இராஜ்யத்தில் மிகப்பெரிய பொறுப்புகள் கையளிக்கப்படும். தேவனுடைய ஆலயத்திலும், புதிய எருசலேமிலும் ஒரு நித்தியமான இடம் கொடுக்கப்படும். "சமுதாயத்தில் ஒரு தூணாக இருக்கிறவர்" என்று சில தனி நபர்களை விவரிப்பதை நாம் கேட்டிருக்கிறோம். இப்படிப்பட்டவர்கள் நன்றாக அறியப்பட்டவரும், மதிக்கப்பட்டவரும் சமுதாய நலனுக்காக பங்களிக்கக்கூடியவர்கள் என்பதை இது குறிக்கிறது. தேவனுடைய ஆலயத்தில் தூணாக இருக்கக்கூடிய கிறிஸ்தவர்களும் இதே குணங்களை உடையவர்களாக இருப்பார்கள். இவர்களும் நன்கு அறியப்பட்டவர்களும், மதிக்கப்பட்டவர்களும், தேவனுடைய வேலைகளில் அதிகமாகப் பங்களிப்பவர்களுமாக இருப்பார்கள். தனிப்பட்ட இந்த நபர்களின்மேல் தேவனுடைய நாமத்தையும், புதிய எருசலேமின் நாமத்தையும் எழுதி தேவன் அவர்களை முறைப்படி ஏற்றுக்கொள்வார். இந்தப் பெரிதான அழைப்பின் பந்தயப்பொருளுக்காக ஓடிக்கொண்டவர்களுக்கு முன் எத்தனை வியப்பூட்டும் பொறுப்புகளும், சிலாக்கியமும் வைக்கப்பட்டுள்ளது. அவர்களின்மேல் தேவனுடைய நாமம் எழுதப்பட்டக் காரியமானது, அவர்களின் நடைமுறைகளில் முழுமையாக தேவனையே சுட்டிக்காட்டுவார்கள் என்று குறிப்பிடுகிறது. இதனால் இவர்கள் கிறிஸ்துவின் சாயலில் முழுமையாக வளர்ச்சியடைய வேண்டியிருக்கிறது.

"என்னுடைய புதிய நாமத்தை" அவர்கள்மேல் எழுதுவதாக யோவான் கூறுகிறார். இதற்கு, "மணவாளனுடைய நாமம் மணவாட்டிக்குக்

கொடுக்கப்படும்" என்று பொருள்படலாம் என்று சகோதரர் ரசல் கூறுகிறார் (R3970). ஒரு மணவாட்டி தனக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கும் மணவாளனுடைய நாமத்தைப் பெற்றுக்கொள்வதுபோல, பரலோக மணவாட்டி தன்னுடைய நேசரின் பெயரை பெற்றுக் கொள்வாள். நம்முடைய ஆண்டவரோடு இணைந்திருக்கக்கூடிய கனம், மகிமையை எதிர்பார்த்து இருக்கக்கூடிய நமக்கு இந்த ஒரு நம்பிக்கை, நம் ஒவ்வொருவரையும் அதிகபட்சமாக விசுவாசத்திற்குள் நம்மை உறுதிப்படுத்த வேண்டும்.

**ஒரு ஜீவ கிரீடம்**

"நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப் படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" (வெளிப்படுத்தல் 2:10).

சுவிசேஷ யுகம் முழுவதிலும் வாழ்ந்த பரிசுத்தவான்கள், தாங்கள் பெற்றிருந்த தேவபக்தியின் நிமித்தம் அதிகமாகத் துன்பப்பட்டார்கள். அநேக பரிசுத்தவான்களின் கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசமானது, அவர்களை இரத்த சாட்சியாக மரிப்பதற்கு உண்மையில் வாய்ப்பளித்தது என்பதை நாம் உணரும்போது, மேற்கூறப்பட்டுள்ள வசனத்திலுள்ள கடைசி வாக்குத்தத்தம் அர்த்தமுள்ளதாகக் காணப்படுகிறது. இப்படிப்பட்ட உபத்திரவங்களை சமாளிக்க இயலாததினால் பலர் தங்களுடைய விசுவாசத்தைவிட்டுப் பின்வாங்கிப்போனதாகத் தெரிகிறது. அதே நேரத்தில் வேறு சிலர், தங்களுடைய விசுவாசத்தில் உறுதிப்பட்டு, மரண பயத்தை மேற்கொண்டார்கள். இப்படிப்பட்ட பரிசுத்தவான்களுக்கே குறிப்பாக ஜீவ கிரீடத்தின் வாக்குத்தத்தம் பொருத்தமானதாக இருந்தாலும் இந்த யுகத்தில் ஜெயங்கொள்ளுகிற அனைவருக்கும் இது கொடுக்கப்படும். இந்தக் கிரீடம் ஆவிக்குரிய விதத்தில் பல வழிகளில் விவரிக்கப்பட்டுள்ளது. "இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது" (2 தீமோத்தேயு 4:8). "பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்" (1 பேதுரு 5:4). நீதி, கனம், மகிமை என்பவைகளினால் இந்தக் கிரீடத்தை வர்ணிக்கலாம்.

இவ்வளவு உன்னதமான பரிசைக் கொடுப்பதற்கு தேவன் பயன்படுத்தும் நிபந்தனை களைப் பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் இப்படியாக விவரிக்கிறார். "தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார், சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்" (ரோமர் 2:6-7). இருதயத்தில் எந்தளவுக்கு உண்மையான அர்ப்பணிப்பு உள்ளதோ, அந்தளவுக்கு ஊழியங்களும் நன்மை செய்வதில் நீடியபொறுமையும் வெளிப்படும். கிறிஸ்துவைப் போன்ற இந்த நடக்கையின் விளைவாக இவர்களுக்கு மகிமை, கனம் மற்றும் அழியாமை பரிசளிக்கப்படும்.

இந்தப் பரிசின் முக்கியத்துவத்தை நம்மால் புரிந்துகொள்ள இயலாது. அழியாமை என்றால் மரணம் இல்லாத ஜீவன் மற்றும் ஜீவிப்பதற்கு எந்த ஆதாரமும் தேவையில்லை என்றே நாம் பொதுவாக தொகுத்து உரைக்கிறோம். ஆனால் சந்தேகத்திற்கிடமின்றி ஒரு அழியா ஜீவனைப் பற்றிய இந்த விவரங்கள் மிகவும் குறைவுள்ளதாக இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் மகிமை, கனம் மற்றும் நித்திய ஜீவனை அழியாமையோடு இணைக்கும்போது, இதன் விளக்கம் மீண்டும் நம்மைத் திணர வைக்கிறது. விவரிக்கப்பட்டுள்ள இந்த வார்த்தைகள் தேவனுடைய சுபாவமாக இருக்கிறது. ஆயினும் இவையனைத்தும் கிறிஸ்துவின் மணவாட்டிக்குக் கையளிக்கப்படும். கனம் பொருந்திய இந்த வகுப்பாருக்குச் சிந்தையில் திட்டவட்டமான குறிக்கோள்களும், வேலைகளும் இன்றி தேவன் இவைகளை கையளிக்கமாட்டார். மேலும் தேவனுடைய சர்வாதிகாரத்தின் பிரதிநிதிகளாக தேவனுடைய சித்தத்தை முழுமையாக ஸ்தாபிக்க தேவையான பண்புகள் இவைகளே.

**வருங்கால பணி**

"ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக் கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக் கிறார்" (எபேசியர் 2:10). தேவன் முன்கூட்டியே தீர்மானித்த கிறிஸ்துவின் மணவாட்டிக்குரிய பங்கிற்குப் பல நோக்கங்கள் உண்டு. அவள் தேவனுடைய கைவேலையாக இருக்கிறாள். ஒருமுறை அவள் சரியாக ஆயத்தப்பட்டுவிட்டால், தேவன் அவளுக்கு நியமித்திருக்கும் மிகப்பெரிய வேலைக்காக அவள் தயாராக இருப்பாள். இந்த யுகத்தில் விசுவாசம் மற்றும் குணலட்சணங்களின் வளர்ச்சியே முதன்மையானது. காணக்கூடா தவைகளை நாம் நம்ப வேண்டும் (1 கொரிந்தியர் 13:12). ஆனால் வருங்காலத்தில் நாம் தேவனை

முகமுகமாய்ப் பார்க்கும்போது சகல காரியங்களையும் நாம் தெளிவாகக் காணலாம். இனி ஒருபோதும் விசுவாசம் தேவைப்படாது. அதற்குப்பின் சபை தனக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் நினைவு இனிமையான வேலையைச் செய்வதற்கு நிலைமாற்றம் அடைவார்கள்.

"நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின் படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" (கலாத்தியர் 3:29). இயேசு மற்றும் சபையின் வேலையை, ஆபிரகாமின் வாக்குத்தத்தம் பொதுவான சொற்களில் தொகுத்துரைத்துள்ளது. இவர்கள் பூமியின் முழு குடும்பங்களையும் ஆசீர்வதிக்க வேண்டும். செயல்முறைப் படுத்தப்படும்போது மனுக்குலத்தின் கல்வி பயிற்சியில் இந்தப் பொதுவான வாக்கியத்திற்கு ஒரு திட்டவட்டமான பயன்பாடுகள் உள்ளது. இனம் என்ற தடை வேலிகள் நீக்கப்படும், பகை வேரோடு பிடுங்கப்படும், போட்டி போராட்டங்களின் அழிவுக்குரிய அம்சங்கள் அகற்றப்படும், மனுஷனின் சகோதரத்துவம் உலகளாவிய கோட்பாடாக மாறிவிடும். இயேசு மற்றும் அவருடைய மணவாட்டி தங்களுடைய தனிப்பட்ட அனுபவங்களிலிருந்தும் தெய்வீக உதவியினாலும் திரட்டிச் சேர்த்த மிகப்பெரிதான ஞானம் இந்த வேலைக்குத் தேவைப்படும். மனுஷருக்குச் சதையான இருதயங்கள் கொடுக்கப்படும்போது, பரிசுத்தமான கோட்பாடுகள் அவர்களின் இருதயத்தில் நடப்படும் (எசேக்கியேல் 36:26). இந்த மனித சிருஷ்டிப்பை முன் திட்டப்படி வடிவமைத்து அவர்களைப் பிரதான மத்தியஸ்தர் இயேசு அவர்களை மகிமைக்கு அழைத்துச் செல்வார். அப்பொழுது ஜனங்கள் தேவனுடைய மிகப்பெரிய கோட்பாடுகளை மனப்பூர்வமான இருதயத்தோடு மதிப்பார்கள். அந்த வேலை நிறைவடையும்போது, மனுஷனுடைய ஆதிக்கம் அதைக் காட்டிலும் மேலான தேவனுடைய ஆதிக்கத்திற்குக் கீழ்ப்படுத்தப்பட்டு, தேவனே சகலத்திலும் சகலமுமாக இருப்பார் (1 கொரிந்தியர் 15:28).

**வரக்கூடிய யுகங்கள்**

"கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்வதற்காக, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்" (எபேசியர் 2:6-7).

ஆயிரவருட ஆட்சியின் வேலை முடிவடைந்தப் பின், இயேசுவுக்கும் அவருடைய மணவாட்டிக்கும் ஒரு புதிய முதன்மை இருக்கும். ஆனாலும் சபை வகுப்பார் தேவனுடைய கிருபையின் முழுமையான ஐசுவரியத்தை அனுபவித்ததில்லை என்று மேற்கூறப்பட்ட வசனப்பகுதி குறிப்பிடுகிறது. இங்கு "யுகங்கள்" என்று பன்மையில் சொல்லப்பட்ட வார்த்தை ஆர்வமூட்டுகிறதாக உள்ளது. நாம் இன்று அறிந்ததுபோல, தொடர்ந்து தேவனுடைய திட்டத்தில் பல யுகங்கள் இருக்கும் என்றும் இந்த வேத பகுதி கருதுகிறது. இந்த யுகங்கள் தொடர்ந்து நடைபெறும்போது சபை தேவனுடைய கிருபையின் ஆழங்களைத் தொடர்ந்து அனுபவிப்பார்கள். தேவனுடைய ஓய்வு (ஆதியாகமம் 2:2) நிறைவடையும் போது, சந்தேகத்திற்கிடமின்றி அவருடைய சிருஷ்டிப்பின் ஆற்றலை இந்தப் பூமியைக் கடந்து விரிவாக்குவார். அதற்குப் பின் சபையின் பங்களிப்பு பற்றி நாம் அறியோம். ஆயினும் மிகப்பெரிய சிருஷ்டிகராகிய தேவனுடைய கிரியை மகிமையானதாக இருக்கும் என்று நாம் நிச்சயிக்கலாம். அவருடைய வருங்கால திட்டங்கள் இந்த அண்டசராசரத்திற்கும் மிகுந்த மகிழ்ச்சியையும், ஜீவனையும் வருவிக்கும்.

மணவாட்டியின் வருங்கால அனுபவங்கள் எப்படியாக இருக்கும் என்று நாம் புரிந்துகொள்வதற்காக எடுக்கும் சிறிய முயற்சிகளில் கீழ்க்காணும் வரிகளையாவது நம்மை நோக்கிச் சொல்லிக்கொள்ளலாம்: "தேவனோடும் அவருடைய ஒரேபேறான குமாரனுடைய மணவாட்டியாக இருப்பதற்கான எதிர்பார்ப்புக்காக விசுவாசத்தில் நிலைத்திருக்க எடுக்கும் எல்லா முயற்சிகள் பெருமதிப்புடையது." அவர்களுடைய திட்டம் மற்றும் புதிய செயல்பாடுகளின் பங்கேற்கும் நம்பிக்கை மிகவும் சிலிர்ப்பூட்டுகிறதாக இருக்கும். எனவே நாம் கூடுமான முயற்சிகளைச் செய்து அந்தத் திட்டங்களைச் செயல்முறைப்படுத்த வேண்டும்.

"நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்" (வெளிப்படுத்தல் 3:21).

"கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களில் அவரோடேகூட உட்காரவும் செய்தார் " (எபேசியர் 2:7).

தொடரும் தேவனுடையமேற்பார்வை சம்பந்தப்பட்ட வாக்குத்தத்தங்கள்

# வாக்குத்தத்தங்களை நம்புதல்



"இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (2 பேதுரு 1:4).

"விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள்" என்ற இந்த விரிவான சொற்பொருள் விளக்கத்திற்கு ஏற்றதான சிறப்புமிக்க வசன பகுதிகளை வேதமாணவர்கள் வைத்திருக்கிறார்கள். இவைகளைச் சேகரித்து வாசிக்கக்கூடிய நூல்களாக முதலில் கலி:.போர்னியாவிலுள்ள லாஸ் ஏன்ஜல்ஸ்-இல் 1954-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. ஆயினும் இந்த வகையைச் சார்ந்த இன்னும் பல வசனங்கள் அந்தப் பிரதியில் சேர்க்கப்படவில்லை.

சங்கீதம் 119:105-ஆம் வசனத்தைப் புகழாதவர்கள் யார்? "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது."

எத்தனைமுறை 1 பேதுரு 5:7-ஆம் வசனத்தை நாம் கேட்டிருப்போம், மனப்பாடமாக ஒப்புவித்திருப்போம். "அவர் உங்களை விசாரிக்கிற வரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்"

இருந்தப்பொழுதிலும், "என்னைப் பெலப் படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலன் உண்டு" (பிலிப்பியர் 4:13).

இவைகளை நாம் வாசிக்கிறோம், இவைகளை உணர்ந்து பாராட்டுகிறோம், இவைகளினால் ஊக்குவிக்கப்படுகிறோம். நாம் தேடி கண்டுபிடித்து பெருமதிப்புடைய பொக்கிஷங்களைப் போல பாதுகாப்பதற்காக அன்பான தேவன் உள்நோக்குடன் விசேஷமாக நமக்குரிய நிலையில் இந்த வாக்குத்தத்தங்களை வைத்திருந்தாலும் பலதடவை தேவன் தந்திட்ட நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான வாக்குத்தத்தங்களை நாம் விசுவாசிப்பதில்லை.

இந்த வாக்குத்தத்தங்களை நமக்காக கோரிக்கொள்ளக்கூடிய உரிமையை நாம் பெற்றிருக்கிறோமா என்ற கேள்வியை நம்முடைய இருதயத்தின் ஆழத்தில் நமக்குள் ஏன் கேட்கிறோம்? நாம் இந்த அழகான சொற்றொடர்களை அறிந்துகொண்டு தலையணையிலுள்ள பூத்தையல் வேலையைப்போல, நம்முடைய சிந்தையைச் சுற்றி இவைகளைப் பத்திரமாக வைத்திருக்கிறோமா? அல்லது இவைகள் தேவனோடு நம்முடைய கட்டுகளை உறுதிப்படுத்தும் படியாக நம்முடைய இருதயங்களிலும், சிந்தைகளிலும் ஆழமாக வேர் விட்டுள்ளதா?

இந்த வாக்குத்தத்தங்கள் நம்மை ஜீவனுக்கு அதாவது நித்திய ஜீவனுக்கு வழி நடத்தும். இந்த வாக்குத்தத்தின் வழியாகவே நாம் தெய்வீக சுபாவத்தில் பங்குபெறலாம். இந்த இலக்கிலிருந்து நம்மை விலக்கி வைப்பதற்கு சாத்தான் தன்னுடைய முழு வல்லமையையும் பயன்படுத்துவதில் என்ன ஆச்சரியம்? தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பயனற்றதாக்குவது சாத்தியமல்ல. ஆனால் என்ன செய்வது? கேள்விகளை எழுப்பத்தக்கதாகவும், சந்தேகங்களை உருவாக்கவும் உறுதியற்ற நிலையை நம்முடைய சிந்தைக்குள் அவன் புகுத்தி, மிகுதியாகப் படித்தவர்கள், உறுதியான விசுவாசமுள்ளவர்கள் போன்றவர்களுக்கு மட்டுமே இந்த வாக்குத்தத்தங்கள் பொருந்தும் என்றும், நாம் கோரக்கூடிய உரிமைகளை நம்முடைய பாதையில் சாத்தான் திட்டமிட்டு, "வாக்குத்தத்தத்திற்குத் தடைகளை" நேரடியாக வைத்திருக்கிறதுபோல் தோன்றுகிறது அல்லவா? எந்தளவுக்கு நாம் வருத்தப்பட்டு, கோபங்கொண்டு, நம்மை அபாத்திரமாக உணரும் உணர்வுகளே சாத்தான் பயன்படுத்தும் கருவிகளாக உள்ளது. அவன் தேவன் தந்த வாக்குத்தத்தங்களைப் பெறுவதற்கு நாம் அபாத்திரராக இருக்கிறோம் என்று பழிக்கூறிக் கொண்டிருப்பான். இந்த வாக்குத்தத் தங்களின் மேலுள்ள நம்பிக்கையின் நிலை, நமக்குத்தானே பொருத்தி, இப்படிப்பட்ட தடைகளைத் "தடுப்பதற்கு" நேரடியான நம்முடைய ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும்.

சாத்தானுடைய திட்டம் உண்மையில் சிறந்ததாக உள்ளது. இந்த வாக்குத்தத்தங்களை தடை செய்யக்கூடிய தடைகள் உண்மையாக நம்முடைய மாம்சத்தின் அபூரணங்களில் மிகவும் நய வஞ்சகமாகச் செயல்படுகிறது. இவைகள் நம்முடைய தவறுகள் மற்றும் உன்னதப்பாட்டில் எச்சரித்திருக்கிற நம்முடைய இருதயத்திலுள்ள சிறு நரிகளைப் பயன்படுத்துகிறது (உன்னதப்பாட்டு 2:15).

கீழ்ப்படியாமைக்குள் வீழ்த்தும்படிக்கு சாத்தான் இயேசுவை சோதிப்பதற்கு வசனங்களைச்

சுட்டிக்காட்டினதுபோல, "மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" கலாத்தியர் 6:7 அல்லது "தேவரீர் என் நிந்தையையும் என் வெட்கத்தையும் என் அவமானத்தையும் அறிந்திருக்கிறீர் " சங்கீதம் 69:19 அல்லது "எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி" ரோமர் 3:23 வசனங்களை நம்மை அச்சுறுத்தும்படிக்கு நமக்கு நினைவுப்படுத்தலாம். வாக்குத்தத்தங்களை நாம் கோருவதில் சந்தேகங்கள் எழுப்பும்படியாக சாத்தான் நம்முடைய வசனங்களைப் பயன்படுத்தலாம். இந்த வழியில் இயேசுவையும்கூட தவறாக நடத்தும் என்று சிந்தித்தான். நாம் ஜாக்கிரதையாக இராவிட்டால் அவைகள் நம்மை ஊக்குவிக்கும் சரியான கருவிகளாகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக நம்முடைய குறைவுகளில் நிலைநிறுத்திவிடும்.

ஆனால் இவைகளின்மேல் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, 2 கொரிந்தியர் 7:1-ஆம் வசனத்தைத் தொடர்ந்து நம்முடைய நினைவில்கொள்ள வேண்டும். "இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்,"

ஒருவேளை நமக்கு முன் வைக்கப்படும் காட்சி இக்காரியத்தில் புரிந்துகொள்வதற்கு உதவியாக இருக்கலாம். உங்களுடைய இருதயத்தைப் பழைய சாமான்களால் நிரப்பப்பட்ட தூசியுள்ள ஓர் அறையாக கற்பனை செய்து பாருங்கள். அதில் பல பெட்டிகளின்மேல் வருத்தம், கவலை, ஏமாற்றங்கள், "நான் இதைச் சொல்லியிருக்கலாம்," "நான் இதைச் சொல்லாமலும் இருந்திருக்கலாம்" போன்ற தலைப்புகள் எழுதப்பட்டிருக்கும்போது, செவி நிறைய புதிதான வாக்குத்தத்தங்கள் வெள்ளம்போல பாய்ந்தாலும், அவைகள் நிரந்தரமாக அங்கு தங்குவதற்கு இடம் இருக்காதே. பழைய பெட்டிகளில் திணரடிக்கும் தூசி, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நம்முடைய இருதயத்திலுள்ள சரியான இடத்தில் தங்குவதற்கான வழிகளைத் தடுத்துவிடும்.

துயரம், கவலைப்போன்ற எதிர்மறையான உணர்வுகள் பாவமாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனாலும் நமக்குள் பரிசுத்தத்தைப் பூரணப்படுத்துவதற்காகப் பயன்படும் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு, நம்முடைய சிந்தனைகளிலும் இருதயங்களிலும் இடமில்லாத படிக்கு தேவையற்ற இந்த உணர்வுகள் நிரப்பி விடுகிறது. இவை போன்ற மிகவலிமை வாய்ந்த உணர்ச்சி மிக்க காரியங்களை நாம் தவிர்ப்பது நல்லது. சில நேரங்களில் மிகுந்த ஆசீர்வாதங்கள் கடுமையானச் சோதனைகளிலிருந்து வரும். இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களை எதிர்மறைவான உணர்வுகளினால் மட்டுமல்ல, நம்முடைய வாழ்க்கையை ஆதிக்கம் செலுத்தி கொண்டிருக்கும் எந்த நுட்பமான காரியங்களினாலும் நசுக்க வேண்டாம்.

**தேவனுடைய ஜனங்களை இடறச் செய்யும் சில தடைகளை (வாக்குத்தத்தங்களை) இங்குக் காணலாம்**

❖ **துயரம் அல்லது கவலை.** (இந்தச் சுழற்சியை நான் எவ்வாறு நிறுத்த முடியும்? நான் செய்த காரியங்களுக்குத் தேவன் என்னை என்றுமே மன்னிக்கமாட்டார்). 1 யோவான் 1:9-ஆம் வசனத்திற்கு ஒப்பிடுங்கள் "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." "மேலும்சகல துரைத்தனங்களுக்கும், அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்" (கொலோ 2:10).

❖ **பிறரை மன்னிக்கும் தன்மை.** (நான் காயப்பட்டேன், குற்றப்படுத்தப்பட்டேன் அதை நான் மேற்கொள்ள முடியாது). "தேவனை ஒருவரும் ஒரு போதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்" 1 யோவான் 4:12- ஆம் வசனத்தோடும், "மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்; அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள்; மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாகும்படி தீர்க்காதிருங்கள்; அப்பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள்; விடுதலைபண்ணுங்கள்; அப்பொழுது நீங்களும் விடுதலைபண்ணப்படுவீர்கள்" லூக்கா 6:37-ஆம் வசனத்தோடும் ஒப்பிடுங்கள்.

❖ **தீய தேர்வுகளும், சோதனைகளும்.** (நான் மீண்டும் மீண்டும் தவறு செய்தேன், நான் மன்னிக்கப்படுவேனா?) "தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகிறார்" சங்கீதம் 103:13,

14-ஆம் வசனம் மற்றும் "நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை" புலம்பல் 3:22, 23-ஆம் வசனங்களோடு ஒப்பிடுங்கள்.

❖ **படிக்கும் பழக்கமற்ற நிலை.** (மற்றும் பல காரியங்களை நான் முதலில் செய்ய வேண்டும். நான் படிக்காமல் இருப்பதை ஒருவரும் கவனிக்க மாட்டார்கள்)." அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாய் இருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே" (எபிரெயர் 10:23). "என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்" (எரேமியா 33:3). "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" (யாக்கோபு 1:5, 6). வசனங்களோடு ஒப்பிடவும்.

❖ **தீய நோக்கம்.** (ஆண்டவர் மற்றவரிடத்தில் எதிர்பார்க்காமல், என்னிடத்தில் மட்டும் ஏன் எதிர்பார்க்க வேண்டும்?) "உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானம் உண்டு; அவர்களுக்கு இடறலில்லை" (சங்கீதம் 119:165). "உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (மத்தேயு 6:21). "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்" (யாக்கோபு 4:6). வசனங்களோடு ஒப்பிடவும்.

❖ **கோபம்.** (நான் கோபப்படுவதற்கு உரிமையுண்டு). "கொந்தளிப்பை அமர்த்துகிறார், அதின் அலைகள் அடங்குகின்றது" (சங்கீதம் 107:29). "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்" (மத்தேயு 5:9). "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்" (மத்தேயு 5:11). "சந்தோஷப்பட்டு, களி கூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசி களையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே" (மத்தேயு 5:12). வசனங்களோடு ஒப்பிடுங்கள்.

❖ **குறைவான வழி நடத்தல்.** (நான் எங்கிருந்து துவங்குவது? நான் நல்ல மனிதனாக இராவிட்டால் அதில் என்ன பலன்?) "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" (சங்கீதம் 119:105). "கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்" (ஏசாயா 58:11). "தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்" (யாக்கோபு 4:8). வசனங்களை ஒப்பிடுங்கள்.

❖ **தவறான முன்னுரிமைகள்.** (எனக்கு நேரம் குறைவாக உள்ளது. நான் பின் தொடர்ந்து செல்ல பல ஆர்வமூட்டும் காரியங்கள் உண்டு). "உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்" (நீதிமொழிகள் 3:5, 6). "நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்" (சங்கீதம் 37:23). "இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்" (மத்தேயு 6:32, 33). வசனங்களோடு ஒப்பிடவும்.

❖ **கவலை.** (கவலைப்படுவதற்கு அநேகக் காரியங்கள் உண்டு). "கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன்கொடுப்பார்; கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்" (சங்கீதம் 29:11). "கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை; தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார்" (நாகூம் 1:7). "ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்"(ஏசாயா 66:13). "உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்" (சங்கீதம் 91:11). "தேவனுடைய ஜனங்களின் இருதயங்கள் கவலையிலிருந்து முற்றிலும் விடுபடுவதற்கு தெய்வீக பராமரிப்பின் விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை முற்றும் முடிய பயன்படுத்திக்கொள்ள வேண்டும்." (தொகுப்பு 6, பக்கம் 572)

❖ **பயம்.** (மேற்கொள்வதற்கு எனக்குப் போதுமான பலமில்லையோ?) "நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால் பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்" (யோவான் 16:27). "தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (ரோமர் 8:31). "அதினாலே நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே" (எபிரெயர் 13:6). "உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்" (ஏசாயா 26:3). "கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?" (ஆதியாகமம் 18:4). வசனங்களோடு ஒப்பிடவும்.

❖ **சந்தேகம்.** (நான் போதுமானளவுக்கு நல்லவன் இல்லை. நிச்சயமாக நான் கருத்துள்ளவனும் இல்லை. நான் ஒரு பாவி என்பதை அறிந்திருக்கிறேன். நான் எப்படி மாறுவது?) "நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாய் இருக்கிறோம்" (எபேசியர் 2:10). "நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்" (1 பேதுரு 2:3). "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது" (1 பேதுரு 3:12) என்ற வசனங்களோடு சமப்படுத்துங்கள்.

❖ **இருமனம்.** (என்னால் ஒரு முடிவெடுக்க இயலவில்லை. தவறான முடிவாக இருந்தால் என்ன செய்வது?) "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி, நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" (பிலிப்பியர் 1:5-6). "கர்த்தரோ உண்மையுள்ளவர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீமையினின்று விலக்கிக் காத்துக்கொள்ளுவார்" (2 தெசலோனிக்கெயர் 3:3) வசனங்களோடு ஒப்பிடவும்.

❖ **பேராசை.** (இன்னும் ஒரு காரியம் மட்டும் எனக்குத் தேவை, அதற்குப் பின் நான் உண்மையில் மகிழ்ச்சியாய் இருப்பேன்). "நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயும் இருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்" (2 கொரிந்தியர் 9:8). "என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" (2 கொரிந்தியர் 12:9). "கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்" (நீதிமொழிகள் 10:22). "எல்லாம் உங்களுடையதே, நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து தேவனுடையவர்" (1 கொரிந்தியர் 3:21,23). வசனங்களோடு ஒப்பிடவும்.

❖ **தனிமை.** (நான் தனிமையில் உள்ளேன், ஒருவரும் எனக்கு உதவிசெய்ய இயலாது). "என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்வார்" (சங்கீதம் 27:10). "நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்" (சங்கீதம் 34:18). வசனங்களோடு ஒப்பிடவும். .

துரதிர்ஷ்டவசமாக சவாலான இந்தப் பட்டியல் முடிவடையாததுபோல் தோன்றுகிறது. இந்த ஒரே காரணத்திற்காகவே தேவன் நமக்கு இவ்வளவு வாக்குத்தத்தங்களைத் தந்திருக்கிறார். இந்தப் பட்டியலின் காரணமாகவே நமக்கு இந்த வாக்குத்தத்தங்கள் தேவைப்படுகிறது. மேலும் இவைகள் நமக்குப் பொருந்தக்கூடியவைகள் என்று நம்ப வேண்டும். நம்பிக்கையே இருதயத்திலுள்ள விசுவாசத்தின் பயன்பாடாகும். இந்த இடத்தில்தானே சாதாரண நிலைக்கும் நம்முடைய சிறப்பு மிக்க கிறிஸ்தவ வாழ்க்கைக்குமுள்ள வேறுபாட்டைத் தீர்மானிக்கும் நம்முடைய வாழ்நாளிலுள்ள குப்பைக் கூளங்களை நம்முடைய இருதயங்களிலும், சிந்தைகளிலும் சேர்த்திருக்கலாம். நம்முடைய சிந்தைகளில் உறுதியாக வேரூன்றும் வாக்குத்தத்தங்கள் மற்றும் நித்தமும் கட்டுப்பாட்டிற்குள்ளான வளர்ச்சியையும், இப்படிப்பட்ட எதிர்மறையான சிந்தனைகள் மற்றும் கிரியைகள் தடைச்செய்யும் தடுக்கல்களை உருவாக்கலாம்.

நாம் தேவன்மேல் கொண்டிருக்கும் நம்பிக்கையை மனதார பயிற்றுவித்து ஒவ்வொரு நாளும் அந்த நம்பிக்கையில் இன்னும் ஆழமான நிலையில் வாழ்வதற்குக் கற்றுக்கொண்டு இந்தத் தடைகளுக்கு எதிராகப் போராடுவதே நமக்குண்டான சவாலாக இருக்கிறது. மனக்களிப்பு மற்றும் பாராட்டுகளைத் தாண்டி இந்த வாக்குறுதிகள் நம் வாழ்கையை மாற்றக்கூடிய விசுவாசத்தை தேவன் மேல் வைக்க நமக்கு உதவும் கருவிகளாக இருக்கிறது.

உண்மையான சந்தோஷத்தைப் பற்றிய பாடங்கள், சீர் குலையாத சமாதானம், நிலையான ஐக்கியம், உருமாற்றம், பெருமை, தெளிவான வழிநடத்துதல், நித்தியத்திற்கும் ஆழமான

நம்பிக்கை போன்றவைகளை "எவ்வாறு" பெற வேண்டும் என்ற வாக்குத்தத்தங்கள் இந்தத் தடைகளுக்கு எதிராகப் போராடுகிறது.

வேதாகமத்தில் பல ஆழமான வடுக்களுக்கு (குறைப்பாடுகள்) உள்ள கதாபாத்திரங்கள் - தேவனால் நேசிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய அடிப்படையானக் காரியங்களில் தோல்வியடையாமலும் எவ்வளவு கடினமான சூழ்நிலைகளிலும் அவரைத் துதித்துப் போற்றுவதை நிறுத்திவிடாமல் இருந்தார்கள். எந்தப் பரிசையும் பொருட்படுத்தாமல் பரலோகத்தின் தேவனைக் கனப்படுத்தும்படிக்கு அவருடைய சித்தத்தைச் செய்து, அவருக்குப் பிரியமாக நடந்துகொள்வதே நம்முடைய குறிக்கோளாக இருக்க வேண்டும். நமது நோக்கமே தேவனால் நிறுத்துப்பார்க்கப்படுகிறது.

நம்முடைய உள்நோக்கத்தை விதைத்து அவருடைய சித்தம் செய்ய விரும்புகிறோம். கனிகள் வளர்ச்சியடையுமளவுக்கு அது சத்தியத்தினால் நீர் பாய்ச்சப்படும் என்று நம்புகிறோம். நம்முடைய இயல்பான சரிவுகளுக்கு எதிரான போராட்டம் மற்றும் நம்மைத் துன்புறுத்துவதற்காக சாத்தான் உற்பத்தி செய்து நமக்கு முன் வைக்கக்கூடிய சோதனைகளுக்கு எதிராக நேர்மையான விருப்பத்தை நமக்குள் விதைப்பதற்குத் தொடர்ந்து போராடுகிறோம். இது ஒரு கடினமான முயற்சி. ஆனாலும் நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிகளிலும் இந்த வாக்குத்தத்தங்களைக் கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டு நாம் தொடர்ந்து முன்னேறிச்செல்ல வேண்டும்.

தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தில் உறுதியான மற்றும் கனமான ஆவிக்குரிய பட்டயத்தை உருவாக்குவதற்கான மூலப்பொருளாக இந்த வாக்குத்தத்தங்கள் உள்ளது. ஒரு பயிற்சி பெற்ற போர்வீரனைப்போல இந்தப் பட்டயத்தை நம்பிக்கையோடு பயன்படுத்த வேண்டும். இதை நாம் தொடர்ந்து பழக்கப்படுத்திக்கொள்ளாவிட்டால் நம்முடைய பாதுகாப்பை இழந்து அதன் பாரத்தினால் தளர்ந்து விழுவோம் (சங்கீதம் 89:43).

"இப்படிப்பட்ட **வாக்குத்தத்தங்கள்** நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் **சுத்திகரித்துக்கொண்டு**, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத் தக்கடவோம்" (2 கொரிந்தியர் 7:1).

**Him alone:**

இந்த இலக்கைப் பற்றிக்கொள்வதற்கு உதவியாக, மார்ச் 30-ஆம் தேதியில் கொடுக்கப்பட்டிருக்கும் மன்னாவில் சொல்லப்பட்டபடி நாம் ஒரு அன்றாட கணக்கை ஒப்புவிக்க வேண்டும். "இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்" (2 பேதுரு 3:11).

"தேவனைப் போன்ற குணங்களில் எந்த விதமான பொல்லாத பேச்சுக்களும், எந்த அசுத்தமான சம்பாஷனைகளும், மெய்பற்றற்ற அல்லது ஒழுங்கற்ற வார்த்தைகள் நிச்சயமாக உள்ளடக்கப்படுவதில்லை. நேர்மை மற்றும் சத்தியம் என்கிற கிறிஸ்துவின் நாமத்தைக் கொண்டிருக்கும் யாவரும் இப்படிப்பட்டவைகளை மிகத் தொலைவாக அகற்ற வேண்டும். வீண்வார்த்தைகள், மனம் வருந்தத்தக்கக் காரியங்கள், மன்னிக்கப்படாத குற்றங்கள் போன்றவைகள் நமக்கு எதிராக நிற்காதபடிக்கு, ஆண்டவரிடத்தில் நித்தமும் நம்முடைய கணக்காக தீர்வு செய்ய நினைவில் கொள்ள வேண்டும். நித்தமும் நம்முடைய கணக்கை தேவனிடம் ஒப்புவித்து வரக்கூடிய ஒவ்வொரு நாளுக்கும், தேவைக்கும் அதிகமான மேற்கொள்ளும் சக்தியைத் தரக்கூடிய கிருபை தேடும்போது, நம்முடைய நியாயத்தீர்ப்பில் முற்றிலுமாக கடன் தீர்க்கப்பட்டவர்களாக நாம் அவருக்கு ஏற்புடைய வர்களாகவும், மகிழ்விக்கக் கூடியவர்களாகவும் இருக்க நம்முடைய ஆவியைக் குறித்து, கிறிஸ்துவின் பரிசுத்த ஆவியின் சாட்சியத்தைப் பெற்று, கிறிஸ்துவின் மூலம் தேவனுக்கு முன் ஒப்புதல் பெற்றவர்களாக நிற்கமுடியும்" (R1938).

தாவீது இராஜா - "தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும்" (சங்கீதம் 51:10, 11).

# பிரிட்டனின் வெளியேற்றத்தால் உலகம் அதிர்ச்சி

"பின்னும் அவர்கள்: நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு, நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டார்கள்" (ஆதியாகமம் 11:4).

பெருமைக்குரிய கோபுரம் என்னும் நூலில், 1890 – 1914, போருக்கு முன் உலகின் உருவப்படம் என்னும் தலைப்பில் வரலாற்று ஆசிரியரான பார்பரா டச்மேன் (Barbara Tuchman) என்பவர், "இறுதியாக இங்கிலாந்தின் பாரம்பரிய சகிப்புத்தன்மை சீற்றம் கொண்டது" என்று எழுதுகிறார். முதல் உலக போருக்கு முன்பே இங்கிலாந்தில் நடந்த இந்த ஆய்வு, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து இங்கிலாந்து வெளியேற அண்மையில் நடந்த வாக்களிப்பிற்கு ஒரு புது அர்த்தத்தை அளிக்கிறது. இந்தப் பிரபலமான வாக்களிப்பைக்குறித்து பலர் அதுவும் இங்கிலாந்தில் இருப்பவர்களே ஆச்சரியப்பட்டாலும், முழு ஐரோப்பிய ஒன்றியத்துடன் இங்கிலாந்து ஈடுபட்டதில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். மத்திய வங்கியின் ஓர்-அளவு-பொருந்தும் (one-size-fits all) கொள்கையை எதிர்த்து பிரிட்டிஷ் பவுண்டு என்ற நாணயத்தை அது தனக்கென்று வைத்துக்கொண்டது. இன்னும் கூடுதலாக ஸ்பெயின், கிரீஸ், போர்ச்சுகல் போன்று அது ஐரோப்பாவுடன் அரசியலில் ஓர் ஆழமான பற்றுதல்கொண்டதாக இருந்ததில்லை.

1951-இல் நடந்த பாரீசின் ஒப்பந்தத்தால், நிலக்கரி மற்றும் இரும்பு தொழிற்சாலைகளை ஒருங்கிணைந்த ஆறு நாடுகள் இணைந்து ஐரோப்பிய ஐக்கிய குடியரசை உருவாக்கியது. இது பொது சந்தையாக அறியப்பட்டது. 1957-இல் இன்னும் பல நாடுகள் இணைந்ததால், ஐரோப்பாவில் பொருளாதார சமுகம் உருவானது. 1992-இல் பனிப்போர் முடிந்து, Maastricht ஒப்பந்தம் கையெழுத்தானபோது, ஐரோப்பிய ஒன்றியம் உருவானது. இங்கிலாந்து அதனுடன் சேர்ந்தபோது அது பொருளாதார நெருக்கடியில் இருந்தது. ஆனால் அது இப்பொழுது இல்லை. லண்டன் போன்ற முக்கிய நகரங்கள் ஐரோப்பிய ஒன்றியத்தை ஆதரித்தாலும், அகதிகள் குடியேறியிருந்த தாழ்த்தப்பட்ட வடக்கு பகுதிகளிலேயே மிக அதிகமாக வாக்களிப்பு நடந்தது. மிகக் குறைந்த எண்ணிக்கையில் தீவிரவாதிகள் சேதத்தை விளைவித்தாலும், இங்கிலாந்து தன்னிடம் வெறும் 126,000 தஞ்சம் புகுவோரையே வைத்துள்ளது. இந்த எண்ணிக்கையில் யுனைட்டட் கிங்டம் (UK) இல் வாழும் 64 மில்லியன் ஜனத்தொகையில் வெறும் 0.2% ஆகும்.

பொருளாதார ரீதியாகப் பார்க்கும்பொழுது யூரோவை நாணயமாக ஏற்றுக்கொண்ட 19 நாடுகளும் (Eurozone) எதிர்பார்த்த முறையில் வளர்ச்சியடைந்த நாடுகள் அல்ல. 2007-இல் நடந்த நெருக்கடியைவிட இப்பொழுது பல நாடுகளில் GDP வளர்ச்சி வீதங்கள் மிகக் குறைவாக உள்ளது. ஐரோப்பிய மத்திய வங்கியின் கடுமையாக பணவியல் கொள்கைகள் நாடுகளுக்கிடையே வேறுபாடுகளை அதிகரித்தது. ஏற்றுமதியில் தங்கள் போட்டியை காண்பிக்க, தங்கள் நாணயங்களை மதிப்பிழக்கச் செய்த பல நாடுகள், இப்பொழுது யூரோ நாணயத்தில் அதைச் செய்ய இயலாது. தற்சமயம் பொருளாதாரத்தில் மிகவும் நலிவுற்ற கிரீஸ் மற்றும் இத்தாலி நாடுகளுள் இதனால் மிகவும் தீங்கிற்குள்ளாயின. ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாகத் திகழும் ஜெர்மனி வலுவான பொருளாதார காரணமாக, எந்தவித தடையுமின்றி ஏற்றுமதி சந்தையில் மிகவும் வலுபெற்றவர்களாய் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

### ஐரோப்பாவை ஐக்கியப்படுத்த முன்னால் முயற்சிகள்

ஐரோப்பா கண்டத்தை ஐக்கியப்படுத்துவதில் ரோமாபுரிதான் முதல் பேரரசாய் இருந்தது. இத்தாலிய ஐக்கியத்துடன் துவங்கி ரோம பேரரசு 400 ஆண்டுகள் விரிவடைந்தது (218 BC – 198 AD). 610-ஆம் ஆண்டு கிழக்கு பேரரசின் சரிவிற்குப் பிறகு, 200 ஆண்டுகள் எல்லாம் நிலையாய் இருந்தது. பிறகு 800-இல் போப் லியோ 111 சார்லிமேக்னே (Charlemagne) என்ற பிரான்ஸ் அரசரை "ரோம பேரரசர்" என்று முடிசூட்டினார். சார்லிமேக்னே, வடக்கு இத்தாலி பிரான்ஸ் ஜெர்மனியின் பல பகுதிகள் மற்றும் நெதர்லாண்ட்ஸ் கண்டத்தின் ஒரு கணிசமான பகுதியை ஒன்றுபடுத்தினார். சமகாலத்தவர்கள் அவரை ஐரோப்பின் தந்தை என்று அழைத்தனர்.

புனித ரோம பேரரசு, (800-1806)-ஆம் ஆண்டுவரை போப் மார்க்கத்துடன் இணைந்து, இடை காலத்தில் பான் (Pan)-ஐரோப்பிய நிறுவனத்தை ஆதிக்கம் செய்து வந்தது. ஜெர்மனியின் இராஜ்யத்தையும், வடக்கு இத்தாலியையும் கட்டுப்படுத்திக்கொண்டிருந்தது. ஆனால் அது போப்புடன் வைத்திருந்த தொடர்பை மிக முக்கியமாய் கருதியது. பரிசுத்த பேரரசு தங்களது உரிமை என்ற ஜெர்மனியின் கூற்று இங்கிலாந்து மற்றும் பிரான்சு இடையே சர்ச்சையை உண்டாக்கியது. ஆதலால் ஐரோப்பிய தலைமையில் இன்றுவரை ஒரு விவாதம் தொடர்ந்து தூண்டப்பட்டு வருகிறது. மேலும், போப் மற்றும் சார்லிமேக்னே பேரரசின் மூலம் ரோமுடன் வைத்திருக்கும் தொடர்பால், ஐக்கியப்பட்ட ஐரோப்பா இன்றும் உயிருடன் இருக்கிறது என்ற கருத்தை பரிசுத்த ரோம இராஜ்யம் பராமரித்து வருகிறது.

மற்றவர்களைவிட நெப்போலியன்தான் ஐரோப்பிய கண்டத்தை ஒருங்கிணைப்பதில் நெருங்கி வந்தார். 1799-ஆம் ஆண்டில் ரோம குடியரசின் இரண்டுமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களைக் குறிக்கும் வகையில் தன்னையே "முதல் தூதராக" அவர் அறிவித்தார். 1804-ஆம் ஆண்டில் பாரிசில் உள்ள நாட்ரி டேம் கத்தீட்ரலில் (Notre Dame Cathedral) என்னும் இடத்தில் தன்னை பேரரசராக முடிசூட்ட போப் பயஸ் VII யை அழைத்தார்.

நெப்போலியன் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் செய்ததுப்போல், அடால்ப் ஹிட்லர் ரஷ்யா மீது படையெடுத்தார். ஐரோப்பா மீது அவர் கொண்டிருந்த ஆக்கிரமிப்பு, நெப்போலியனின் குணத்திற்கு இணையாக இருந்தது. ஜெர்மனியின் இத்தாலிய கூட்டாளியான பெனிட்டோ முசோலினி ரோம வரலாற்றில் ஒரு குறிப்பிடப்பட்டவராய் இருந்தாலும், ஜெர்மனியின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த புனித ரோம பேரரசை தனக்கு ஒரு எழுச்சியூட்டும் முன்னோடியாகவே ஹிட்லர் கருதிவந்தார்.

ஒவ்வொரு வரலாற்று முன்னோடிகளைப் பார்க்கும்பொழுது, அவர்கள் அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரத்தின்மேல் கொண்டிருந்த ஆசையால், மக்களுக்குத் தேவைப்பட்ட பலன்கள் கிடைக்காமல் போய்விட்டது. இன்று ஐரோப்பிய ஒன்றியம் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் உள்ளது. இங்கிலாந்து பின்வாங்கியது தாக்கத்தைக் காணமுடிகிறது.

சேபா, தேதான் தர்ஷீசின் வியாபாரிகள் மற்றும் இளஞ்சிங்கங்கள் ஒன்றுகூடி வருவதே எசேக்கியேல் 38-ஆம் அதிகாரத்தின் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். வசனம் 6-இல் கோமரின் கூட்டாளியான கோக், இஸ்ரயேலை படையெடுத்ததைக்குறித்து கேள்வி எழுப்பப்படுகிறது. "பழைய சிங்கம்" என்பது இங்கிலாந்தையும், அதன் முன்னால் காலனியான அமெரிக்கா கனடா மற்றும் ஆஸ்திரேலியா நாடுகள் இளஞ்சிங்கங்கள் என்றும் சில வேதமாணவர்கள் கருதுகின்றனர். அப்படி என்றால், Brexit-யில் இங்கிலாந்தின் முரண்பாட்டால் ஏற்பட்ட பிளவில் கோகுடன் எந்தவித உறவும் இல்லை என்றே தெரியவருகிறது.

**பாபேலின் கோபுரம்**

மனிதர்களை ஐக்கியப்படுத்தும் முயற்சிகள், மனித வரலாற்றின் ஆதிகாலத்திலிருந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வெள்ளப் பெருக்கைத் தொடர்ந்து உலக சமுகத்தை மையமாக்க ஒரு கோபுரம் கட்ட வேண்டும் என்று மக்கள் ஏற்பாடு செய்தனர். "நாம் பூமியின் மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு, நமக்கு ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி **நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம்** வாருங்கள்" (ஆதியாகமம் 11:4). பலுகி பெருகி பூமியை நிரப்ப வேண்டுமென்ற தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதற்குப் பதிலாக கோபுரம் கட்டினவர்கள் தங்களுக்கு ஒரு பேர் உண்டுபண்ணும்படி விரும்பினார்கள் (ஆதியாகமம் 9:1). எல்லோரையும் ஆட்சி செய்ய ஒரு ஒருங்கிணைந்த அரசாங்கம் வேண்டுமென்று எல்லோரும் விரும்பினர். தேவன் அவர்கள் மொழியை குழப்பமடையச் செய்ததால், அவர்களால் ஒருவர் மற்றொருவரைப் புரிந்துகொள்ள இயலவில்லை. இறுதியில் அவர்கள் சிதறிப்போனார்கள். அவர்களின் கவனம் மாறுபட்டது, நடத்தை தனித்துவம் பெற்றது, அவர்கள் பழக்கவழக்கம் வேறுபட்டது, மரபணு செறிவு மூலம் அவர்கள் தோலின் நிறம் மாறியது மற்றும் அவர்கள் கலாச்சாரங்கள் விரிவுப்படுத்தப்பட்டது.

மக்கள் ஒருவருக்கொருவர் தொடர்புகொள்ள முடியாத காரணத்தால், அவர்கள் அனைவரும் 70 தேசம்/மொழியாக இடம்பெயர்ந்து இந்தப் பூமியை நிரப்பச் சென்றதை ஆதியாகமம் 10-இல் உள்ள நாடுகளின் அட்டவணையில் காணலாம். தொல்லியல் நிறுவனம் சில அடிப்படை விவரங்களை உறுதி செய்கிறது. சிலர் கால போக்கில் தொலைந்துபோனாலும், அநேக மக்கள் குழுக்களை அது அடையாளம் காட்டுகிறது. வேதாகமத்தை மொழிபெயர்ப்பதில் ஆர்வம் காட்டும் சில மிஷனரி நிறுவனங்கள் (மொழியியல் கோடை நிறுவனம் மற்றும் SIL சர்வதேச நிறுவனம்) உலக மொழிகளை ஆவணப்படுத்தும் வேலையில் ஈடுபட்டுள்ளனர். Ethnologue என்னும் ஒரு

SIL வெளியீட்டில், மொழிகளின் மிக விரிவான அட்டவணை காணப்படுகிறது. அதன் விரிவான, வகைப்படுத்தப்பட்ட பட்டியலைப்பார்த்தால், 2009-ஆம் ஆண்டுவரை, 6909 தனித்துவமான மொழிகளை அது அடக்கியுள்ளது.

அமெரிக்க மொழியியல் சமுகம் (LSA), பெரும்பாலான மொழிகள் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தது என்றும், மொழிகள் எல்லாம் ஒன்றோடொன்று தொடர்புடையதாய் உள்ளது என்றும் கூறுகிறது. Ethnologue-இல் உள்ள 6909 மொழிகளில் 230 மொழிகள் மட்டுமே ஐரோப்பாவில் பேசப்படுகிறது. 2197 மொழிகள் ஆசியாவில் பேசப்படுகிறது. 136 தனித்துவம் வாய்ந்த மொழிகள் உள்ளதாக Ethnologue கூறுகிறது. முக்கிய மொழிகளைத் தாண்டி சென்றால் - ஆங்கிலம், Mandarin சைனீஸ், ஸ்பானீஷ் இலட்சக்கணக்கான மொழிகள் பேசும் இன்னும் சில மொழிகள் மரபணுக்களால் இணைந்த பல தனித்துவம் வாய்ந்த குடும்பங்களையே சாரும். இன்னும் ஆச்சரியப்படும் வகையில் பல மொழிகள் மறைந்துகொண்டிருக்கிறதாக LSA கூறுகிறது.

பாபேல் கோபுரத்தில் மக்கள் சிதறடிக்கப்பட்டது, ஒரு நோக்கத்துடன் நடந்த நிகழ்வு என்று அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். "மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்" (அப்போஸ்தலர் 17:26).

கடந்த 4000 வருடமாக மக்களின் பிரிவினை மிகவும் பயனுள்ளதாக இருந்தது. நாடுகள் ஒருவருக்கொருவர் எதிராக தங்களைக் காத்துக்கொண்டனர். மொழிகளால் ஏற்பட்ட தடையால் மக்கள், தங்கள் மொழி பேசும் மக்களுடன் மட்டும் நெருங்கி இருந்தனர். போக்குவரத்தின் வருகையால் தேசிய தடைகள் உடைய துவங்கியது மற்றும் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக பல தடைகள் அகற்றப்பட்டுள்ளது. செப்பனியா இதைக்குறித்து தீர்க்கதரிசனமாய் கூறுகையில், "என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், இராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம் பண்ணினேன்" (செப்பனியா 3:8).

செப்பனியா தனது தீர்க்கதரிசனத்தில், இந்தக் கூட்டிச்சேர்த்தல் நடைபெறுவதைத் தொடர்ந்து துன்ப காலம் துவங்கி அரசாங்கங்கள் எடுத்துக்கொள்ளப்படும். கிறிஸ்து மற்றும் அவரின் சபையின் மூலம் யேகோவா தேவனால் உருவாக்கப்படும் ஒரு உலகிற்கு நன்மை தரும் அரசாங்கங்கள் நிறுவப்படும் என்று கூறுகிறார். பாபேலில் இருந்த குழப்பம் நீக்கப்படும். ஒன்றுப்பட்ட சமுகத்தை உருவாக்கும் முயற்சிகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு, உண்மையான, நன்மை அளிக்கக்கூடிய ஆட்சி உலகெங்கும் உருவாக்கப்படும்.

யேகோவா தேவன் எழுத்து வடிவத்திலோ, உருவ வடிவத்திலோ அல்லது இரண்டு வகையிலோ அனைவரும் தேவனின் இராஜ்யத்தில் ஒரு மொழியைக் கற்றுக்கொள்வார்கள் என்கிறார். "ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்" (செப்பனியா 3:9). அப்பொழுது அறிவிக்கப்படும் தெய்வீக கிருபை மற்றும் சத்தியம் தூயதாய் இருக்கும். அதைப் பெறும் அனைவருக்கும் அது செழுமையான ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும். உண்மையாய் ஒன்றமைக்கப்படும் அந்த நாளை நாம் எதிர்நோக்கி இருப்போம்.